




ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ ஜனவரி. 05, 2024 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 92 ❖ ரூ.10


## டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி உடன் அமைச்சர் உதயநிதி

# சந்திப்பு

## கேலோ இந்தியா விளையாட்டு போட்டி தொடக்க விழாவில் பங்கேற்பதாக பிரதமர் மோடி உறுதியளித்துள்ளார் உதயநிதி பேட்டி

**புதுடெல்லி, ஜன. 5-**

**டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து பேசினார். கேலோ இந்தியா போட்டிகள் தமிழகத்தில் நடக்கவிருப்பதை அடுத்து, இதில் பிரதமருக்கு அழைப்பு விடுக்கும் வகையில் அமைச்சர் உதயநிதி நேற்று நேரில் சந்தித்துள்ளார்.**



கிரிக்கெட், ஹாக்கி தவிர மற்ற விளையாட்டுப் போட்டிகளில் திறமையானவர்களைக் கண்டறிந்து பயிற்சியளித்து, ஒலிம்பிக் உள்ளிட்ட போட்டிகளில் பதக்கங்களை வெல்லச் செய்யும் நோக்கில், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2018-ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் இந்த ஆண்டு தமிழகத்தில் நடைபெறுகிறது. சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சியில் ஜன.19 முதல் 31-ம் தேதி வரை போட்டிகள் நடைபெறுகின்றன. இப்போட்டிகளில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர்.

இப்போட்டியின் நிறைவு விழாவை சென்னையில் மிகப் பிரம்மாண்டமாக நடத்த தமிழக விளையாட்டுத் துறை திட்டமிட்டு உள்ளது. இந்நிலையில், இந்த நிறைவு விழாவில் பங்கேற்கும்படி பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து நேரில் அழைப்பு விடுத்துள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய உதயநிதி ஸ்டாலின், " கேலோ இந்தியா விளையாட்டு போட்டி தொடக்க விழாவில் பங்கேற்பதாக பிரதமர் மோடி உறுதியளித்துள்ளார்" என்றார். இது குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்தனதுஎக்ஸ்தளத்தில் கூறப்பட்டுள்ளதாவது:- ஜனவரி 19, 2024 அன்று சென்னையில் நடைபெறவுள்ள கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப்போட்டியின் தொடக்க விழாவிற்காக இன்று புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அழைத்ததில் மகிழ்ச்சி.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோளின்படி, தமிழகத்தின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் விரிவான நிவாரணம், மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள தேசிய பேரிடர் நிவாரண நிதியை உடனடியாக வழங்குமாறு தமிழக அரசின் சார்பில் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தேன். தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக பிரதமர் உறுதியளித்தார்.

மேலும், தமிழகத்தின் பொது முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விஷயங்கள் குறித்தும், குறிப்பாக தமிழகத்தில் விளையாட்டுத்துறையின் பன்முக வளர்ச்சி குறித்து பிரதமருடன் கலந்துரையாடினார். இந்த சந்திப்பின் போது, 2023ம் ஆண்டுக்கான சிஎம் டிராபி விளையாட்டு மற்றும் தமிழ்நாடு நடத்திய ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப்பை வெற்றிகரமாக நடத்தியதைக்காட்டும்காபி டேபிள் புத்தகத்தையும் பிரதமரிடம் வழங்கினேன். கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023, தமிழ்நாட்டின் பெருமைமிக்க அமைப்புத் திறனையும், விளையாட்டுத் துறையில் புகழ்பெற்ற வரலாற்றையும் நிரூபிக்க மற்றொரு நம்பிக்கைக்குரிய வாய்ப்பாக இருக்கும். இவ்வாறு அதில் குறிப்பிட்டிருந்தார்.

## தாம்பரம் சானடோரியத்தில் ரூ.18 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடம் : முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை : ஜன. 5, தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சானடோரியம், ஹோம் சாலையில் 18 கோடி ரூபாய் செலவில் 461 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.




பணிபுரியும் இடங்களில் பெண்களின் பங்களிப்பில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பெண்கள் கிராமங்கள், சிறு நகரங்களிலிருந்து பெருநகரங்களுக்கு பணிநிமித்தம் இடம்பெயர்ந்து வருகின்றனர். அவ்வாறு பணி நிமித்தமாக பெண்கள் தங்களது வீட்டை விட்டு வெளியில் தங்க வேண்டிய சூழ்நிலையில், அவர்களுக்கு குறைந்த வாடகையில், பணிபுரியும் இடத்திற்கு அருகில் தரமான மற்றும் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் அவசியத் தேவையாக உள்ளது. பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளின் தேவைகளை உணர்ந்த தமிழ்நாடு அரசு, பொருளாதார ரீதியாக நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகளை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அமைத்து வருகிறது.

பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகளை உருவாக்கிட "தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்" தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டு, புதிய விடுதிகளை கட்டுதல், பழைய விடுதிகளை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவை தற்போது அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் 226 மகளிர் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள 2 புதிய பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்கள், சென்னை

அடையாறு, விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் 458 மகளிர் தங்கும் வகையில் புதுப்பிக்கப்பட்ட 7 பணிபுரியும் மகளிருக்கான விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.07.2023 அன்று திறந்து வைக்கப்பட்டு, செயல்பட்டு கொண்டிருக்கிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் தாம்பரம் சானடோரியம் பகுதியில், நான்கு தளங்களில் 18 கோடி ரூபாய் செலவில் 461 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதிக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று திறந்து வைத்தார்.



**புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கும்மங்குடி ஊராட்சி, தெற்கு பொந்துப்புளியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடையினை, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நகைக்கடன் தள்ளுபடிக்கான ஆணைகளை வழங்கினார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம்மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் எஸ்.பாலகிருஷ்ணன்அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.**

## துவரம் பருப்பு கொள்முதலுக்கான இணையதளத்தை தொடங்கி வைத்தார் அமித் ஷா

புதுடெல்லி : ஜன. 5-

துவரம் பருப்பை கொள்முதல் செய்வதற்கான இணையதளத்தை அமித் ஷா தொடங்கி வைத்தார்.

பருப்பு வகைகள் உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெறுவதை ஊக்குவிக்கும் கருத்தரங்கு டெல்லியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, "பருப்பு உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற வேண்டும். பருப்பு உற்பத்தியில் இந்தியாவை தன்னிறைவு அடையச் செய்வது மிகவும் அவசியம். வரும் 2027-ம் ஆண்டு டிசம்பருக்குள் நாடு பருப்பு உற்பத்தியில் தன்னிறைவு என நான் உறுதி அளிக்கிறேன். நமது நாட்டில் விவசாயத்துறை மிகப் பெரிய மாற்றத்தை விவசாயிகளால் சந்தித்து வருகிறது.

தேசிய விவசாய கூட்டுறவு சந்தை கூட்டமைப்பு மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு நிறுவனம் ஆகியவற்றில் நீங்கள் பதிவு செய்திருந்தால் உங்களிடம் இருந்து பருப்புகளை அரசு கொள்முதல் செய்யும். இது பிரதமர் நரேந்திர மோடியின் வாக்குறுதி. குறைந்தபட்ச ஆதரவு விலையில் பருப்புகளை கொள்முதல் செய்ய வேண்டிய பொறுப்பை இதன்மூலம் அரசு ஏற்கிறது.

2014-15ல் துவரம்பருப்புக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ. 4,350 ஆக இருந்தது. அது தற்போது ரூ. 7 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. விவசாயிகளை மையமாகக் கொண்ட அரசின் நடவடிக்கைகள் காரணமாக துவரம் பருப்பு உற்பத்தியாளர்கள் நல்ல விலையை பெறுகிறார்கள். விவசாயிகளிடம் இருந்து துவரம் பருப்பு கொள்முதல் செய்வதை ஒழுங்குபடுத்து வதற்காகவே தற்போது இணையதளம் துவக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலைக்கு விவசாயிகளிடம் இருந்து துவரம் பருப்பை அரசு கொள்முதல் செய்யும்.

இணையதளத்தில் விவசாயிகள் தாங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். அதோடு,



துவக்க வேளாண் கடன் சங்கம், விவசாயிகள் உற்பத்தி அமைப்பு ஆகியவற்றின் மூலமாகவும் இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். இதில் பதிவு செய்து துவரம் பருப்பை விற்கும்போது, அதற்குரிய பணம் நேரடியாக சம்பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இதில், இடைத்தரகர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

அந்த வகையில், விவசாயிகளை மையப்படுத்திய திட்டமாக இந்த திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்சார்பு இந்தியா எனும் லட்சியத்தின் பரிசு இது. https://esamridhi.in எனும் இணையதளம், விவசாயிகள், தேசிய விவசாய கூட்டுறவு சந்தை கூட்டமைப்பு, சம்பந்தப்பட்ட அரசு துறைகள் ஆகியவற்றுக்கிடையே சிறப்பான இணைப்பை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை இது.

வழக்கமாக அரிசி, கோதுமை ஆகியவற்றை அரசு கொள்முதல் செய்யும். தற்போது பசுமை புரட்சியின் ஒருங்கிணைந்த நடவடிக்கையாக தற்போது துவரம் பருப்பு கொள்முதல் இணைக்கப்பட்டுள்ளது. இது இந்திய விவசாயத்துக்கும், கோடிக்கணக்கான விவசாயிகளுக்கும் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும். விவசாயிகளிடம் இருந்து 80 சதவீதம் அளவுக்கு துவரம் பருப்பு இந்த இணையதளத்தின் மூலம் கொள்முதல் செய்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. துவரம் பருப்பு இறக்குமதியைக் குறைக்கவும், நாட்டின் உணவு உற்பத்தியை பாதுகாக்கவும், எதிர்கால உணவு உற்பத்தியை உறுதிப்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என அமித் ஷா தெரிவித்தார்.

## பொங்கல் தொகுப்புடன் ரூ. 5,000 ரொக்கம் வழங்க வேண்டும் தமிழக அரசுக்கு இபிஎஸ் வலியுறுத்தல்

**சென்னை : ஜன. 5, "பொங்கல் தொகுப்புடன் ரூ. 5,000 ரொக்கம் வழங்க வேண்டும்" என்று தமிழக அரசுக்கு அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.**



இதுதொடர்பாகஅவர் விடுத்துள்ள அறிக்கையில், "தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை, தமிழக மக்கள் அனைவரும் மன நிறைவோடு சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் அதிமுக அரசில் பொங்கல் தொகுப்புடன் ரொக்கப் பணமும் சேர்த்து ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளையொட்டி வழங்கப்பட்டு வந்தது.

எனது தலைமையிலான அரசில், கொரோனா நோய்த் தொற்றின்போது தமிழக மக்களின் வருமான இழப்பை ஈடுகட்டவும், பொங்கல் திருநாளை உற்சாகத்துடன் கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்தோடும் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்புடன் ரொக்கப் பணமாக ரூ. 2,500 வழங்கப்பட்டது. மேலும்முழுசெங்கரும்பும் வழங்கப்பட்டது. அப்போது, எதிர்க்கட்சியாக இருந்த தற்போதைய முதலவர் ஸ்டாலின், பொங்கல் தொகுப்புடன் ரொக்கப் பணம் ரூ.2,500 போதாது என்றும், 5,000 ரூபாய் ரொக்கப் பணம் வழங்க வேண்டும் என்றும் ஊடகங்களில் பேட்டியளித்தார்.

ஆனால், 2022ம் ஆண்டு பொங்கலுக்கு ரொக்கப் பரிசும் வழங்கவில்லை. உருகிய வெல்லம், பல்லி விழுந்த புளி, கலப்பட மிளகு என்று, தமிழக மக்கள் பயன்படுத்த முடியாத வகையில் 20 பொருட்கள் அடங்கிய தொகுப்பை மட்டும் வழங்கி தமிழக மக்களின் கேலிக்கு உள்ளானார். கடந்த ஆண்டு பொங்கலின்போது, பொங்கல் தொகுப்பில் அரிசி, சர்க்கரை, கரும்புத் துண்டு, ஏலக்காயுடன் ரொக்கப் பணமாக ரூ. 1,000 மட்டுமே வழங்கப்பட்டது. இந்த ஆண்டு பொங்கல் திருநாளுக்கு, பொங்கல் தொகுப்பை மட்டும் அரசு அறிவித்துள்ளது.

எனவே, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்புடன் ரொக்கப் பணமாக ரூ. 1,000 வழங்க வேண்டும் என்றும்; மிக்ஜாம் புயல் மற்றும் கன மழையால் வாழ்வாதாரங்களை இழந்து பாதிக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி, சென்னை புறநகர் பகுதி மற்றும் திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில்வசிக்கும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்புடன் ரொக்கப் பணமாக ரூ. 5,000 வழங்க வேண்டும் என்றும்; எண்ணூர் முகத்துவாரத்தில் பரவிய கச்சா எண்ணெய் படலத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் பொங்கல் தொகுப்புடன் ரொக்கப் பணமாக ரூ. 5,000 வழங்க வேண்டும் என்றும்; தற்போதைய கனமழையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்புடன் ரொக்கப் பணமாக ரூ. 5,000 வழங்க வேண்டும் என்று இந்த திமுக அரசின் முதலமைச்சர் ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்.

எனது தலைமையிலான அரசில், பொங்கல் தொகுப்புடன் வழங்கப்பட்ட கரும்பு, விவசாயிகளிடமிருந்து நேரடியாகக்கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இடைத்தரகர்கள் மூலம் கரும்பு கொள்முதல் செய்தது. இதனால் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. எனவே, இந்த ஆண்டு பொங்கல் பரிசாக வழங்கப்படும் கரும்பு கொள்முதலில் எந்தவிதமான முறைகேடுகளுக்கும் இடம்தராமல், நேரடியாக கரும்பு சாகுபடி விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டும் என்றும், கரும்புக்கான பணம் இடைத்தரகர்கள் இன்றி, நேரடியாக விவசாயிகளைச் சென்றடைய வேண்டும் என்றும் முதலமைச்சர் ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்" என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



**புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் டாக்ஸி மார்க்கெட் எதிரே அமைந்துள்ள ஸ்ரீ ஆறுபடை சண்முகர் சுவாமி ஆலயத்தின் மார்கழி மாத சிறப்பு வழிபாடும் மண்டல பூஜை வழிபாடும் வெகு சிறப்பாக நடைபெற்று ஸ்ரீ ஆறுபடை சண்முகர் சுவாமிக்கு பல்வேறு அபிஷேகங்கள் தீபாரதனை நடைபெற்று நேற்று மாலையில் சந்தன காப்பு அலங்காரத்தில் விநாயகர் பெருமான் ஸ்ரீ ஐயப்பன் அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.**

# இன்று




| சோபகிருது மார்கழி 20 | JAN - FRI வெள்ளி | ஜமா அத்துல் ஆகிர் 22 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 005 / 361 | மேஷம் - பெருமை, ரிஷபம் - பக்தி, மிதுனம் - உழைப்பு, கடகம் - புகழ், சிம்மம் - வரவு, கன்னி - போட்டி, துலாம் - இரக்கம், விருச்சி - சலனம், தனுசு - சுகம், மகரம் - மகிழ்வு, கும்பம் - தேர்ச்சி, மீனம் - பொறுமை |

அழகு பிள்ளைதான் பால் குடிக்கும்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# கொரனா, டெங்கு, கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி வழங்கக்கோரி சிஐடியு ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை, ஜன. 5-

கொரான, டெங்கு மற்றும் கொசுப்புழு ஒழிப்புப் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வலியுறுத்தி உள்ளாட்சித்துறை தொழிலாளர் சங்கம் (சிஐடியு) சார்பில் நேற்று புதுக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டத்தில் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகளில் டெங்கு, கொரானா, சிக்கன்குனியா, மலேரியா போன்ற நோய்களை ஒழிக்கும் பணிகளில் 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களுக்கு, சட்டத்திற்கு எதிராக தொடர் பணி மறுப்பு, பாதுகாப்பு உபகரணங்கள், குறைந்தபட்ச கூலி வழங்கப்படுவதில்லை.

இவர்களுக்கு உடனடியாக குறைந்தபட்ச கூலி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டும். 10 ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும். சுழற்சி முறையை கைவிட்டு தொடர்ச்சியாக பணி வழங்க வேண்டும். அனைவருக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டும். விபத்து நிவாரணம் ரூ.5 லட்சம் வழங்க வேண்டும்.

போராட்டத்திற்கு புதுக்கோட்டை மாவட்ட உள்ளாட்சித்துறை தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் என்.ராஜா தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டப் பொதுச் செயலாளர் கமுகமதலிஜின்னா சிறப்புரையாற்றினார். சிஐடியு மாவட்ட துணைத் தலைவர் எஸ். யாசிந், துணைச் செயலாளர் சி.மாரிக்கண்ணு மற்றும் சங்க நிர்வாகிகள் ஏ.சி.மாணிக்கம், ஏ.முத்தையா, சி.ரெங்கசாமி, எஸ்.செல்வம் உள்ளிட்டோர் பேசினர்.

# தொழில் முனைவோர் ஆவது எப்படி கருத்தரங்கம்

புதுக்கோட்டை, ஜன. 5-



புதுக்கோட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் சுந்தரகணபதி தலைமையில் தமிழக அரசின் திட்டமான தொழில் முனைவோர் ஆவது எப்படி என்ற கருத்தரங்கம் நடைபெற்றது.

இதில் மாருதி கார் கேர் நிறுவன நிறுவனத் தலைவர் மாருதி கண. மோகன்ராஜா கலந்துகொண்டு இன்றைய இளைஞர்கள் தொழில் தொடங்க என்ன மாதிரியான அரசு நலத் திட்டங்கள் இருக்கிறது என்பதை எடுத்துரைத்தார். மேலும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க செயலாளர் இப்ராஹிம் பாபு கலந்துகொண்டு தொழில் முனைவர் ஆவதற்கு அரசின் உதவிகள் வங்கி கடன்கள் மாவட்ட தொழில் மையத்தின் செயல்பாடுகள் பற்றி விளக்கி கூறினார். நிகழ்ச்சியை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஜோதிமணி ஒருங்கிணைத்தார் நிறைவில் உதவி பயிற்சி அலுவலர் முருகேசன் நன்றி கூறினார்.




# காலி பணியிடங்களை நிரப்ப வலியுறுத்தி கலைஞர் கருணாநிதி கல்லூரியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது

புதுக்கோட்டை, ஜன. 5-



ஆசிரியர் கழகம் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் புதுக்கோட்டை கிளையின் சார்பாக கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலை கல்லூரியில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

தமிழகத்தில் உள்ள 170 அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களில் 4000 பணியிடங்களை நிரப்பப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டும் நியமனத்திற்கான அறிவிப்பு இதுவரை வெளியிடப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து விரைந்து ஆசிரியர் பணி நியமன நடவடிக்கைகளை ஆவண செய்யவேண்டும் என்பதற்கான இக்கையெழுத்து இயக்கம் நேற்று கிளைத்தலைவர் கலாகணேசன் தலைமையில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் பிந்தி விளக்க உரையாற்றினார். துணைத் தலைவர் முத்து, பொருளாளர் வசந்தகுமாரி ஆகியோர் ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஒருங்கிணைத்தனர். அனைத்து கிளை உறுப்பினர்களும் மற்றும் மாணவர்களும் கையெழுத்திட்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் பிரசித்தி பெற்ற பெரியநாயகி அம்பாள் உடன் உரை அரங்குலநாதர் கோவிலில் அஷ்டமி பூஜையை முன்னிட்டு ஸ்ரீ பைரவருக்கு சிவாச்சாரியார் வேத மந்திரங்கள முழங்கிட யாக பூஜை செய்து புனித நீர் கொண்டு வந்து அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் பைரவருக்கு சந்தன காப்பு அலங்காரம் மலர் அலங்காரம் செய்து பொங்கல் சுண்டல் வைத்து தீபாராதனை நடைபெற்றது. மதியம் பக்தர்களுக்கு தேரடி கருப்பர் கோவில் அருகில் உள்ள ஸ்ரீ ஸ்ரீ கருப்பசாமி மண்டபத்தில் அன்னதானம் நடைபெற்றது.

# மருந்து வணிகர்களை பாதுகாக்க சிறப்பு சட்டம் இயற்ற வேண்டும் மருந்து வணிகர்கள் சங்கம் மனு

புதுக்கோட்டை,ஜன.5-

புதுக்கோட்டை மாவட்ட மருந்துவணிகர்கள் சங்கத்தினர் கலெக்டர் மெர்சி ரம்யாவிடம் நேற்று காலை கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது, சமீபகாலமாக தமிழ்நாட்டில் சமூக விரோத கும்பல்களின் செயல்பாடுகள் அதிகரித்து வணிகர்களிடம் மாமூல் பெறுவது, உணவகங்களில் சாப்பிடுவதற்கு பணம் கொடுக்காமல் செல்வது, மருந்து வணிகர்களை தாக்குவது போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.



மேலும் கடந்த டிசம்பர் மாதம் 29-ந்தேதி இரவு செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் ஓட்டேரி பகுதியில் மருந்தக உரிமையாளர் ஒரு கும்பலால் வெட்டி கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தமிழ்நாட்டில் உள்ள மருந்து வணிகர்கள் உள்பட அனைத்து வணிகர்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் இச்சம்பவம் தொடர்பாக போலீசார் 3 பேரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட ரவுடிகள் மீது கடும் நடவடிக்கை எடுத்தால் வணிகர்கள் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வணிகத்தில் ஈடுபடுவார்கள். மேலும் மருத்துவ சேவை புரிபவர்களுக்கு சட்டம் இயற்றப்பட்டது போல், அரசிற்கு வரி வருவாயை ஈட்டித்தரும் மருந்து வணிகர்களையும் சமூக விரோத கும்பல்களிடம் பாதுகாக்க அனைத்து வணிகர்களையும் இணைக்கும் படியும் சிறப்பு சட்டம் ஒன்றினை இயற்ற தமிழக அரசுக்கு தாங்கள் பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறியுள்ளார்.

இதில் மாவட்ட புரவலர் ராஜேந்திரன், மாவட்ட தலைவர் கருப்பையா, செயலாளர் ராமநாதன், பொருளாளர் ரமேஷ், மொத்த மருந்து வணிக பிரிவு தலைவர், செந்தில்பழனியப்பன், மாவட்ட ஒருங்கிணைப்புகுழு தலைவர் சலீம், மாவட்ட மக்கள் தொடர்பு மருந்து வணிகர்கள் பிரிவு தலைவர் தேசிங்குராஜன், மொத்த மருந்து வணிகர்கள் பிரிவு துணை தலைவர் விஜயரகுநாதன், இணை செயலாளர் பாண்டியன், மாவட்ட துணை தலைவர் முகமதுசாதிக் பாட்சா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் மக்கள் நல பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

தென்காசி : ஜன. 5-

தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மக்கள் நலப் பணியாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



சென்னை நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்தி அனைவருக்கும் காலமுறை ஊதியத்துடன் நிரந்தர பணி ஆணை வழங்க வேண்டும், பணி ஓய்வு பெற்றவர்கள் மற்றும் மரணம் அடைந்த மக்கள் நல பணியாளர்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதி 5 லட்சம் ரூபாய் வழங்குவதோடு அவர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலை வழங்க வேண்டும், என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் முருகன் தலைமை வகித்தார். பொருளாளர் அருணாசலம், தர்மராஜ், லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் எம் முத்துசாமி வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு மக்கள் நல பணியாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் புதியவன் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். சமூக நலத்துறை பணியாளர் சங்க பொதுச் செயலாளர் துரைசிங், வெங்கடேஷ், மார்த்தாண்ட பூபதி, திருமலை முருகன், மாடசாமி, ராஜசேகர், சேகர், திராவிட மணி, கருப்பசாமி, சண்முகசாமி, அந்தோணி, செல்ல துரைச்சி, ராஜேந்திரன், மாரியப்பன், முத்துக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாநில செயற்குழு உறுப்பினர் பண்டார சிவன் நன்றி கூறினார்.

# போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்த விளக்கக் கூட்டம்

புதுக்கோட்டை, ஜன. 5-

போக்குவரத்துத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்துத் தொழிற் சங்கங்களின் சார்பில் வேலை நிறுத்த விளக்க வாயிற்கூட்டம் நேற்று புதுக்கோட்டையில் நடைபெற்றது.



அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் வரவுக்கும், செலவுக்கும் இடைப்பட்ட தொகையைமற்றதுறைகளுக்கு வழங்குவதைப் போல அரசே வழங்க வேண்டும். புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய முறையே தொடர வேண்டும். ஓய்வுபெற்ற தொழிலாளர்களின் 98 மாத பஞ்சப்படி மற்றும் இதர பணப்பலன்களை நீதிமன்ற உத்தரவுப்படி வழங்க வேண்டும். வாரிசு வேலை மற்றும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும். 15-ஆவது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை உடனே தொடங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அரசுப் போக்குவரத்துக்கழகத்தின் புதுக்கோட்டை பணிமனை முன்பாக வியாழக்கிழமை அனைத்துத் தொழிற்சங்கங்களின் சார்பில் வேலை நிறுத்த விளக்க வாயிற்கூட்டம் நடைபெற்றது.

விளக்கக் கூட்டத்திற்கு போராட்டக்குழு அமைப்பாளர் ஆர்.மணிமாறன் தலைமை வகித்தனர். கோரிக்கைகளை விளக்கி சிஐடியு மாவட்ட பொருளாளர் எஸ். பாலசுப்பிரமணியன், ஏஐடியு மாவட்ட உதவி செயலாளர் எஸ்.செபஸ்தியான், சிஐடியு முன்னாள் மாவட்டத் தலைவர் பெரியசாமி, ஓய்வுபெற்றோர் நல அமைப்பு மண்டலத் தலைவர் பிலோமிநாதன், பொதுச் செயலாளர் எஸ்.இளங்கோவன், டிடிஎஸ்எப் பொதுச் செயலாளர் எச்.ராஜசேகர், ஓய்வுதியர் சங்க செயலாளர் பி.திருநாவுக்கரசு மற்றும் நிர்வாகிகள் எம்.பாலசுப்பிரமணியன், கோராஜேந்திரன், எம்.மாணிக்கம், பிஎல்.குழந்தைவேலு, ஜி.கெம்புராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் காலை உணவு திட்டம் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



அரியலூர் : ஜன. 5,

அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, ஆய்வு மேற்கொண்டார்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், மேலக்கருப்பூர் ஊராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அங்கன்வாடி மையத்தினையும், இடையத்தாங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஏழேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினையும், மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.


ஆய்வின் போது மேலக்கருப்பூர் அங்கன்வாடி மையத்தினை பார்வையிட்டு, மையத்திற்கு வருகைபுரியும் குழந்தைகளின் எண்ணிக்கை, பொருட்களின் இருப்பு பதிவேடு, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் உள்ளிட்டவற்றை ஆய்வுசெய்ததுடன், அங்கன்வாடி மையத்தினை தொடர்ந்து சுத்தமாக பராமரித்திடவும், குழந்தைகளுக்கு உணவினை சுகாதாரமான முறையில் தயாரித்து உரிய நேரத்தில் வழங்கிட வேண்டும் எனவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

மேலும் இடையத்தாங்குடி, ஏழேரி கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை உணவு திட்டத்தை ஆய்வு செய்து குழந்தைகளுக்கு முறையான வகையில் உணவு வழங்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வுகளின் போது மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ஆறுமுகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

# 'மற்றொரு கோத்ரா சம்பவம் நடக்க வாய்ப்புள்ளது' காங்கிரஸ் எம்.எல்.சி பேச்சால் சர்ச்சை

பெங்களூர் : ஜன. 5,

அயோத்தியில் ராமர் கோயில் திறப்பு விழா நடைபெற உள்ள நிலையில் மற்றொரு கோத்ரா சம்பவம் நடக்க வாய்ப்புள்ளது என்று கர்நாடக மாநில காங்கிரஸ் எம்.எல்.சி ஒருவர் பேசியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



உத்தரப்பிரதேச மாநிலம், அயோத்தியில் மிக பிரம்மாண்டமாக கட்டப்பட்டிருக்கும் ராமர் கோயில் 22-ம் தேதி திறக்கப்பட்டு மதியம் 12:45 மணிக்குள் ராமர் கோயிலின் கருவறையில் குழந்தை ராமர் சிலையைப் பிரதிஷ்டை செய்வதற்கான பணிகளை, ஸ்ரீராம ஜென்ம பூமி ஷேத்ரா அறக்கட்டளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், கர்நாடகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.எல்.சி, பி.கே. ஹரிபிரசாத், மற்றொரு கோத்ரா சம்பவம் நடக்க வாய்ப்புள்ளதாக எச்சரித்துள்ளார். "கர்நாடகா அரசு விழிப்புடன் இருக்க வேண்டும். குஜராத்தில் பாபர் மசூதி இடிப்பதற்காகச் சென்ற கரசேவகர்களின் ரயில் பெட்டி எரிக்கப்பட்டது போன்ற மற்றொரு சம்பவம் அயோத்தி கோயில் திறப்பு விழாவில் அரங்கேறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

எனவே, கர்நாடகாவில் அசம்பாவித சம்பவங்களுக்கு இடமளிக்கக் கூடாது. அயோத்திக்கு செல்ல விரும்புபவர்களுக்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். கர்நாடகாவில் இன்னொரு கோத்ரா கொடூரத்தை நாம் பார்க்கக் கூடாது. சில அமைப்புகளின் தலைவர்கள் சில மாநிலங்களுக்குச் சென்று சில பாஜக தலைவர்களை இதுபோன்ற சம்பவம் அரங்கேற்ற தூண்டிவிடுகிறார்கள். ஆனால் அதை என்னால் வெளிப்படையாகச் சொல்ல முடியாது.

இதுபோன்ற செயல்பாடுகள் அந்தக் கட்சிக்குப் புதிதல்ல. அவர்களால் எதையும் செய்ய முடியும். எனவே, அயோத்திக்கு வருகை தரும் அனைத்து மக்களை பாதுகாக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அரசியல் ஆதாயங்களைவிட மக்களின் வாழ்க்கையே முக்கியம்.

ஒரு இந்து தர்ம குரு, ராமர் கோயிலைத் திறந்து வைத்தால், நீங்களும் நானும் எந்த அழைப்பின்றியும் அயோத்திக்கு சென்றிருப்போம். ஆனால், அதை திறந்து வைக்கும் பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் இந்து தர்ம குருவல்ல. அவர்கள் அனைவரும் அரசியல் தலைவர்கள். அதனால்தான் இந்த விழாவை கவனமாக கையாளவேண்டும்" எனத் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் எம்.எல்.சி. ஹரிபிரசாத்தின் இந்தப் பேச்சுக்கு பாஜக தரப்பில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதுகுறித்து பாஜக தலைவரும் முன்னாள் முதல்வருமான டி.வி.சதானந்த கவுடா,"ஹரிபிரசாத் மீது புகார் பதிவு செய்து அவரை கைது செய்ய வேண்டும். அவரின் கூற்று ஏற்றுக்கொள்ள முடியாதது.

அயோத்திக்கு செல்லும் மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் நாடு முழுவதும் உள்ள மக்கள் மனதில் ஒரு அச்ச உணர்வை உருவாக்கலாம் என நினைக்கிறார். இது மிகவும் அநியாயமான, மிகவும் ஆபத்தான, சகிக்க முடியாத கருத்து. எனவே, அவரை உடனடியாக கைது செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.



2024- ஆம் ஆண்டு புத்தாண்டு பிறந்ததை முன்னிட்டு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் முதலமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர், அமைச்சர் பெருமக்கள், துணை சபாநாயகர் மற்றும் அரசு அதிகாரிகளை சந்தித்து சால்வை அணிவித்து புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தார்.

# அரியலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆர்ப்பாட்டம்

அரியலூர் : ஜன. 5,

அரியலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கோரிக்கைவிளக்கஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



மத்திய அரசும், தேர்தல் ஆணையமும், தேர்தல் நடைபெறுகையில், ஈவிஎம் மெஷினை தடை செய்ய வேண்டும். வாக்கு சீட்டு முறையை மீண்டும் அமல்படுத்த வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அரியலூர் தாலுகா அலுவலகம், எதிரே விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் நடைபெற்ற கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்திற்கு, கட்சியின் மாவட்ட செயலாளர்கள் அங்கனூர் சிவக்குமார் (அரியலூர் மேற்கு), கதிர் வளவன் (அரியலூர் கிழக்கு), ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட செய்தி தொடர்பாளர் சுதாகர் வரவேற்புரை பேசினார்.

மாநில அமைப்பு செயலாளர் திருமார்பன் சிறப்புரையாற்றினார். இந்த கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், அங்கனூர் செங்குட்டுவன், கருப்புசாமி, அன்பானந்தம், கொளஞ்சி, இலக்கிய தாசன், மருதவாணன், பாலமுருகன், பெரியாக்குறிச்சி பாலசிங்கம், ஜெயங்கொண்டம் நகராட்சி தலைவர் சுமதி சிவக்குமார், செந்துறை ஊராட்சி மன்ற தலைவர் செல்லம் கடம்பன், ஜெயங்கொண்டம் பாரதி, பாலமுருகன், திலகவதி, ஒன்றிய செயலாளர்கள் தங்கராசு, உத்திராபதி, கண்ணன், எஸ்னை கண்ணன், உள்படபலர் கலந்து கொண்டனர். முடிவில் அரியலூர் நகர செயலாளர் தலித்தாசன் நன்றி கூறினார்.

# செங்குன்றத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



சென்னை, ஜன.5

சென்னை ஆவடி போலீஸ் கமிஷனர் கே. சங்கர் வாகன ஓட்டிகளுக்கு தலைக்கவசம் வழங்கினார். செங்குன்றம் போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியும் இரு சக்கர வாகன போட்டிகளுக்கு தலைக்கவசம் வழங்கும் நிகழ்ச்சியும் செங்குன்றம் பைபாஸ் வடகரை சிக்னல் அருகே நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செங்குன்றம் போக்குவரத்து காவல் உதவி ஆணையர் ஆர். மலைச்சாமி தலைமை தாங்கினார். ஆவடி போக்குவரத்து காவல் துணை ஆணையர் ஏ. ஜெயலட்சுமி முன்னிலை வகித்தார். செங்குன்றம் போக்குவரத்து ஆய்வாளர் டி. சோபிதாஸ் அனைவரையும் வரவேற்றார்.

ஆவடி மாநகர காவல் ஆணையர். கே. சங்கர் சாலை பாதுகாப்புவிழிப்புணர்வுகுறித்து சிறப்புரையாற்றி இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு தலை கவசம் சுமார் ஆயிரத்துக்கும் மேல் வழங்கினார். நிகழ்ச்சியில் நாரவாரி குப்பம் பேரூராட்சி தலைவர். தமிழரசி குமார். நெல் அரிசி சங்க நிர்வாகி. ஜி. கோதண்டன் ஹோட்டல்கள் சங்க நிர்வாகி எஸ். கோபி மற்றும் போக்குவரத்து உதவி ஆய்வாளர்கள். விவேகானந்தன். சரவணன். லோகநாதன். உமாபதி மற்றும் ஏராளமான இருசக்கர வாகன ஓட்டிகள். பொதுமக்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி முடிவில் செங்குன்றம் போக்குவரத்துபுலனாய்வுபிரிவு உதவி ஆணையர். ரூபன் நன்றி கூறினார்.

# மதுரை மாநகராட்சி 70வது வார்டில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம்



மதுரை , ஜன. 5-

மதுரை மாநகராட்சி 70வது வார்டு துரைசாமி நகரில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நடைபெற்றது.

முகாமில் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் கலந்து கொண்டு பொதுமக்கள் மனு கொடுக்கும் துறைகளை ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் 70 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அமுதா தவமணி, திமுக பகுதி செயலாளர் தவமணி, திமுக 70 வது வார்டு வட்டக் கழக செயலாளர் பைபாஸ் பால. சிவகுமார், வட்ட பிரதிநிதி தனசேகர், உதவி ஆணையாளர் சுரேஷ், வட்டாட்சியர் விஜயலட்சுமி, குடியிருப்போர் நல சங்கம் பொருளாளர் செண்பககுமார், துணைச்செயலாளர் காசிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமில் பல்வேறு அரசு துறைகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.

### பூம்புகார் அருகே வானகிரி மீனவ கிராமத்தில் 8 கோடி மதிப்பீட்டில்

# மீன் இறங்குதளம் மற்றும் மீன் ஏல கூடம் ஆகியவற்றை காணொளி காட்சி மூலம் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்



பூம்புகார்,ஜன,5

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் தொகுதிக்குட்பட்ட வானகிரி மீனவர் கிராமத்தில் 2000க்கும் மேற்பட்ட மீனவ குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதியை சேர்ந்த மீனவர்கள் அருகே உள்ள கிராமத்திலிருந்து மீன்பிடிக்க சென்று வந்த நிலையில் தங்களது பகுதியிலேயே மீன் இறங்குதளம் மீன் ஏலக்கூடம் உள்ளிட்ட வசதிகள் வேண்டிய கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனை அடுத்து கடந்த ஆண்டு ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் வானகிரி மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் ஏலக்கூடம் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி அனைத்து பணிகளும் முடிந்த நிலையில் இன்று தமிழக முதல்வர் காணொளி காட்சி மூலம் மீன்பிடி இறங்குதளம் மற்றும் ஏலக் கூடத்தை திறந்து வைத்தார். வானகிரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா.எம்.முருகன் சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் கமலஜோதி தேவேந்திரன், மீன்வளத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### வெங்கல் ஊராட்சியில் ரூ.126.57 லட்சம் மதிப்பில்

# ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்ட நடைபெற்ற பூமி பூஜையில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, டிச5-

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், வெங்கல் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 15-வது நிதி குழு சுகாதார மானிய நிதி 2023-2024-ன் படி ரூ.126.57 லட்சம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, திருவள்ளூர் மாவட்ட சுகாதாரதுறை துணை இயக்குனர் டாக்டர் ஜவகர் தலைமை தாங்கினார். எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக செயலாளர் கோடுவெளி தங்கம் முரளி,எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொற்செல்வி,சத்தியமூர்த்தி,பொறியாளர் நரசிம்மன், பெரியபாளையம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் சங்கீதா,வெங்கல் ஊராட்சிமன்ற தலைவர் சுகந்திராணிலிங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில்,சிறப்பு அழைப்பாளராக பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜையை துவக்கி வைத்தார். இதன் பின்னர்,தமிழக அரசு பொதுமக்களுக்கு செய்து வரும் வளர்ச்சி திட்ட பணிகளை பட்டியலிட்டு பேசினார்.

பின்னர்,ஆரம்ப சுகாதார மைய கட்டுமான பணியை சிறப்பாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு,ஒப்பந்ததாரருக்கும் அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட பிரதிநிதி வெங்கல் பாஸ்கர்,காங்கிரஸ் வட்டாரத் தலைவர் சிவசங்கர், நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ரஜினிகாந்த், அம்பத்தூர் செல்வராஜ், ஒப்பந்ததாரர் அனந்தசயனம், வடமதுரை அப்புன், செம்பேடு செல்வம், குமார், வெங்கடேசன், ஏழுமலை, செம்பேடு கோபி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தத்தனூர் எம்.ஆர்.கல்லூரியில் உயிர்த்தொழில் நுட்பவியல் மற்றும் நுண்ணுயிரியல் துறை கருத்தரங்கம்




அரியலூர் : ஜன. 5-

தத்தனூர் எம்.ஆர். கல்லூரியில் உயர் தொழில் நுட்பவியல் மற்றும் நுண்ணுயிரியல் துறை சார்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இது பற்றி கல்லூரி நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பு: அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், உயிர்த்தொழில் நுட்பவியல் மற்றும் நுண்ணுயிரியல் துறை சார்பாக, தொழில்துறையில் நுண்ணுயிர்களின் பயன்கள் பற்றி ஒருநாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம். ஆர். இரகுநாதன் தலைமை தாங்கினார். இயக்குனர் இராஜமாணிக்கம் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் சங்கீதா முன்னிலை வகித்தார். நுண்ணுயிரியல் துறை பேராசிரியர் பபிலா தேவி வரவேற்புரை ஆற்றினார்.

சிறப்பு விருந்தினராக கோவை டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர் முனைவர் அருண் காந்தி பேசுகையில்: தொழில்துறையில் நுண்ணுயிர்களின் செயல்பாடுகள் பற்றியும், பால் தொழில், மருத்துவ தொழில், உணவுத்தொழில், நொதிகள், அமினோ ஆசிட், ஹார்மோன், ஆர்கானிக் ஆசிட், சிங்கிள் செல் புரோட்டின், ப்ரோபயோடிக்ஸ் போன்ற தொழில் துறையில் நுண்ணுயிர்களின் செயல்பாடுகள் மற்றும் அதன் மூலம் விளையக்கூடிய நன்மைகள் குறித்தும், நுண்ணுயிர்களின் மூலக்கூறுகளை மாற்றி அமைப்பதன் மூலம் மனிதனுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் தடுப்பூசிகள் பெறலாம். பல தொழில் சார்ந்த துறைகளிலும் எந்த வகையான நுண்ணுயிர்களை உபயோகப்படுத்தலாம். அவற்றின் மூலம் எவ்வாறு லாபம் ஈட்டலாம். நுண்ணுயிர்கள் மூலம் விவசாயத்தில் ஏற்படக்கூடிய நன்மைகள் மற்றும் எண்ணெய், விவசாயக் கழிவுகள் இதர தொழிற்சாலை கழிவுகளை நுண்ணுயிர் கொண்டு எவ்வாறு அகற்றுவது குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். நிறைவாக உயிர் தொழில் நுட்பவியல் துறை தலைவர் சிபிலா நன்றி கூறினார்.

# சென்னை தண்டையார்பேட்டையில் 61லட்சம் செலவில் பணிகளை தொடங்க ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் அடிக்கல் நாட்டினர்



சென்னை, ஜன,5

சென்னை தண்டையார்பேட்டை பரமேஸ்வரன் நகர் பகுதியில் சிதிலமடைந்த அங்கன்வாடி மையம், பொதுமக்கள் பயன்படுத்த கூடிய கழிப்பறை இடித்து கட்டி தரும்படி ஆர்கே நகர் சட்ட மன்ற உறுப்பினரிடம் பொதுமக்கள் கோரி வைத்தனர்

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 30 லட்சம் ரூபாய் செலவில் அங்கன்வாடி மையம் மற்றும் நவீன கழிப்பறை மற்றும் தண்டையார்பேட்டை 38 வது வார்டு மாமன்ற உறுப்பினர் 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தண்டையார்பேட்டை பரமேஸ்வரன் நகர், எண்ணூர் நெடுஞ்சாலையில் நவீன பேருந்து நிழற்குடை அமைப்பதற்கான பணிகள்தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது

ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபிநேசர், தண்டையார்பேட்டை மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன் பூஜை போட்டு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இரத்த சோகை விழிப்புணர்வு முகாம்



அறந்தாங்கி , ஜன,5

அறந்தாங்கி அடுத்த பெருநாவலூர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டமும், ஐடிசி லிமிடெட், ஐசிஎம்எல் புதுக்கோட்டை கிளையும் இணைந்து நடத்திய மாணவியர்களுக்கான இரத்த சோகை விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை முகாம், கல்லூரி திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் (பொ) பாலமுருகன் தலைமை தாங்கித் தொடங்கி வைத்தார். தமிழ்த்துறைத்தலைவர் காளிதாஸ், கணினி அறிவியல் துறைத்தலைவர் ரமேஷ் உள்ளிட்ட துறைத்தலைவர்கள் முன்னிலை வகித்தனர். ஐடிசி மனிதவளமேம்பாட்டு அலுவலர் ச.சுந்திர கிஷோர், முகாம் குறித்து அறிமுக உரையாற்றினார். அந்நிறுவனத்தின் மருத்துவ அலுவலர் டாக்டர் கா.காவியலக்ஷ்மி , இரும்புச்சத்து குறைபாடு காரணமாகப் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து மாணவியர்களிடையே விளக்கிப்பேசினார்.

தொடர்ந்து திருச்சி நியூபர்க் இரத்தப்பரிசோதனை நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் மு.ரிஃபாயா பேகம், இரத்த சோகைக்கான காரணங்கள், அறிகுறிகள்,விளைவுகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளை எடுத்துரைத்தார். தொழில்நுட்ப வல்லுநர்கள் ரோஸி மற்றும் இப்ராஹிம் பாஷா ஆகியோர் அடங்கிய குழுவினர் மருத்துவப் பரிசோதனையை சிறப்பாக நடத்தினர். இம்முகாமில் 600க்கும் குறையாத மாணவியர் பங்கேற்று பயனடைந்தனர்.

முன்னதாகக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ( அலகு-1) மு.பழனித்துரை அனைவரையும் வரவேற்றார். நிறைவாகக் கல்லூரி ரெட்ரிப்பன் கிளப் ஒருங்கிணைப்பாளர் ப.செந்தில்குமார் நன்றி கூறினார். முகாம் ஏற்பாடுகளை கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகு- 1 மாணவ, மாணவியர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் பலரும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# குழிபிறை பள்ளி மாணவர்களுக்கு பதினெட்டாம் நூற்றாண்டு வரை உள்ள கல்வெட்டுகள் அறிமுகம்



திருமயம் , ஜன. 5-

புதுக்கோட்டை மாவட்டம் குழிபிறை இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி மாணவர்களை கொண்டு திட்ட அலுவலர் பழனியப்பன் ஒரு வார காலமாக நாட்டு நல பணி திட்டம் நடைபெற்றது. பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவி கவிதா தலைமை ஆசிரியர் கருப்பையா மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் உழவாரப்பணி துவங்கி வைக்கப்பட்டது. இப்பணிதுவக்க பள்ளி வளாகம் அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய சாலை மேல்நிலைப்பள்ளி வளாகங்கள் விளையாட்டுத் தளங்கள் ஐயப்பன் கோவில் பொது குடிநீர் தொட்டியை சுற்றிலும் உள்ள முட்புதர்கள் அகற்றப்பட்டு சீர் செய்யப்பட்டது.

இதில் முக்கிய நிகழ்வாக ஒரு வாரம் முகாமில் பள்ளியின் செயலாளர் இராம மீனாட்சி சொக்கலிங்கம் கலந்துகொண்டு மாணவர்களின் களப்பணியை பார்வையிட்டார். இதில் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் முகாம் நிறைவு நாளில் சிறப்பு விருந்தினராக குமிழி கல்வெட்டுகளை ஆய்வுலகத்திற்கு அறிமுகப்படுத்திய இராஜேந்திரன் கலந்துகொண்டு கல்வெட்டு படிகளை நேரில் காண்பித்து அவை எந்த நூற்றாண்டை சேர்ந்தது என்பதை கூறி இரண்டாம் நூற்றாண்டில் இருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை உள்ள கல்வெட்டுகள் எவ்வகையானவை என்பதையும் விலக்கி கூறினார் இதில் பிராமி எழுத்து வட்ட எழுத்து கிரந்த எழுத்து தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சியை பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தது மிகவும் சிறப்புக்குரியது.

விழா நிறைவில் மாணவர்களுக்கு சிறப்பு முகாம் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்தார்கள் தலைமை ஆசிரியர் கருப்பையா ஆசிரியர்கள் ஐயர் காலை அன்புநாதன், சேவுகன் மணிகண்டன், சார்லஸ், ஆண்டனி, லட்சுமண, ராஜா, உஷா, தேன்மொழி, ஜெயந்தி, ஆறுமுகம், ராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஒரு வாரம் நடைபெற்ற செயல்பாடுகளைப் பற்றிய முகாமின் திட்ட அறிக்கைகளை திட்ட அலுவலர் பழனியப்பன் வாசித்தார். ஆசிரியர் வெங்கடாசலம் நன்றி கூறினார்.

# புதுக்கோட்டைவசந்தபுரி நகர் ஸ்ரீ வலம்புரி வசந்த விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீ ஐயப்பன் சுவாமிக்கு மண்டல பூஜை நடைபெற்றது



புதுக்கோட்டை, ஜன. 5-

புதுக்கோட்டை, வசந்தபுரி நகர் வலம்புரி வசந்த விநாயகர் ஆலயத்தில் ஐயப்ப பஜனை சிறப்பாக நடைபெற்றது.

சுவாமி ஸ்ரீ ஐயப்பனுக்கு தொடர்ந்து 47 நாட்கள் மண்டல பூஜை பல்வேறு அபிஷேகங்கள் தீபாராதனை நடைபெற்றது. 48வது நாள் நிறைவு நாளில் ஸ்ரீ ஐயப்பன் சுவாமிக்குசிறப்பு அபிஷேகங்கள் 18 படி பூஜை, தீபாராதனையும் நடைபெற்றது. பார்வை இசை பள்ளி ஹரிமோகன் குழுவினரின் சிறுவர், சிறுமியர்களின் இசை கருவிகளுடன் ஐயப்ப பஜனை பக்தி இசை நடைபெற்றது.

சிறப்புடன் ஸ்ரீ ஐயப்பன் பாடல் பாடிய சிறுவர், சிறுமியர்களுக்கு நினைவுபரிசு கோயில் நிர்வாகிகள் வழங்கி பாராட்டினார்கள் முன்னதாக வலம்புரி வசந்த விநாயகர், கனக துர்க்கையம்மனுக்கும், முருகபெருமானுக்கும் பல்வேறு அபிஷேகங்கள் தீபாராதனை நடைபெற்றது. கோயில் குருக்கள் சந்தோஷ், பார்த்தசாரதிகுருசாமி நிர்வாகிகள் தலைவர் வி.நடராஜன், துணை தலைவர், மூத்த ஓவியகலைஞர் ஆர்.ஆர்.சுப்பு, செயலாளர் என்.ஆறுமுகம், நிர்வாகக்குழு எஸ்.சாந்தார் உட்பட ஐயப்ப பக்தர்கள் சுற்று வட்டார பக்தர்கள் கலந்து கொண்டனர், அனைவருக்கும் பிராசாதம் வழங்கப்பட்டது.

# களக்குடியில் மாட்டுவண்டி பந்தயம் சாரதி, துணைசாரதி போலீசார் உள்ளிட்ட ஐந்துக்கும் மேற்பட்டோர் படுகாயம்



அறந்தாங்கி , ஜன. 5-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே களக்குடியில் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு முதலாம் ஆண்டு மாபெரும் மாட்டுவண்டி எல்கைபந்தயம் நடைபெற்றது. பெரியமாடு,சிறியமாடு, புதுப்பூட்டு என மூன்று பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் புதுக்கோட்டை தஞ்சாவூர் ராமநாதபுரம் சிவகங்கை கோவை பவானி ஈரோடுஉள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட இரட்டைமாட்டு வண்டிகள் போட்டியில் கலந்து கொண்டன.

போட்டியில் கலந்து கொண்டு மாட்டு வண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தயஇலக்கினை நோக்கி சீறிப்பாய்ந்தன போட்டியில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு மொத்தம் ஒரு லட்ச ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது. அனுமதி பெறாமல் நடைபெற்ற மாட்டுவண்டி பந்தயத்தில் மாட்டுவண்டிக்குஇடையூறாகச் சென்ற இருசக்கர வாகனங்கள் மாட்டுவண்டிகள் மோதிக் கொண்டதில் மாட்டுவண்டி சாரதி போலீசார் உட்பட 5 க்கும் மேற்பட்டோருக்கு பலத்தகாயம் ஏற்பட்டது. வருங்காலங்களில் முறையான விதிமுறைகளை பின்பற்றி பந்தயம் நடத்தக்கோரி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தற்காலிகமாக மூடியுள்ள கோரமண்டல் தொழிற்சாலையை நிரந்தர தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் மாவட்ட ஆட்சியர் உறுதி



சென்னை,ஜன5

சென்னை எண்ணூர் பெரியகுப்பம் பகுதியில் செயல்பட்டுவரும் கோரமண்டல் தொழிற்சாலையில் கடந்த 26 தேதி அன்று நள்ளிரவு குழாயில் ஏற்பட்ட அமோனியா வாயு கசிவால் மீனவ மக்கள் மூச்சு திணறல் ஏற்பட்டு சுமார் 45 பேர் பதிக்கப்பட்டு அரசு மருத்துவமனை, தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையில்கோரமண்டல் தொழிற்சாலை நிரந்தரமாக மூட வலியுறுத்தி 8 வது நாளாக இன்று பெரியகுப்பம் சின்ன குப்பம் மீனவர்கள் அறவழியில் பேராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மீனவர்களின் போராட்டத்திற்கு பல்வேறு அரசியல் கட்சியை சேர்ந்த தலைவர்கள், பிரதிநிதிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இதனையடுத்து எண்ணூர் மீன்வளத்துறை ஆய்வாளர் அலுவலகத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடைப்பெற்றது. திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் நடைபெற்ற கருத்து கேட்பு கூட்டத்தில் சென்னை மாவட்ட ஆட்சியர் ராஷ்மி சித்தார்த் ஜகடே, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம், தண்டையார்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் இப்ராஹிம் மீன்வளத்துறை இணை இயக்குனர் சந்திரன், மண்டல குழு தலைவர் தனியரசு, கிழக்கு பகுதி செயலாளர் வை.ம அருள்தாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் 33 மீனவ கிராமத்தை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது கருத்துக்களை முன் வைத்து பேசினார். சுமார் இரண்டு மணிநேரம் நடைப்பெற்ற கருத்து கேட்பு கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் சந்தித்து பேசிய சென்னை மாவட்ட ஆட்சியர் ராஷ்மி சித்தார்த் ஜகடே இந்த சம்பவத்திற்கு டெக்னிக்கல் எக்ஸ்பர்ட் கமிட்டி அமைக்கப்பட்டு ஆய்வு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தற்காலிகமாக தொழிற்சாலை இயங்குவதை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது, இந்த கூட்டத்தில் மீனவ நிர்வாகிகள் கூறிய பிரச்சனைகளை பதிவு செய்துள்ளோம், இதனைத் தொடர்ந்து தமிழக அரசுக்கு முறையாக எடுத்துக் கூறி நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். கோரமண்டல் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் அதுவரைக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

சிபிசிஎல் ஆயில் கசிவு அமோனியா வாயு கசிவு இருந்தாலும் அரசாங்கம் தொடர்ந்து கண்காணிப்பு கருவிகளை வைத்து கண்காணித்துக் கொண்டிருக்கிறது, மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கவும் இதுபோன்று சம்பவம் அடுத்து வரும் காலத்தில் வரக்கூடாது அதற்கு கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக தெரிவித்தார் அரசாங்கம் முடிவெடுப்பதற்கு கால அவகாசம் தரும்படி போராட்டத்தை ஒத்திவைக்க கேட்டுக் கொண்டார்..

# கனமழை வெள்ளத்தால் ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகம் சேதம் : கனிமொழி எம்.பி நேரில் ஆய்வு



தூத்துக்குடி : ஜன. 5, கனமழை வெள்ளத்தால் சேதமடைந்த தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் அகழ்வாய்வு அருங்காட்சியகத்தை திமுக எம்.பி.கனிமொழி ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள ஆதிச்சநல்லூரில் மத்திய அரசின் சார்பில் ரூ.5 கோடி செலவில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது. அங்கு நடைபெற்ற அகழாய்வின்போது ஏராளமான தொல்லியல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் அந்த அரிய பொருள்களை முதற்கட்டமாக தற்காலிக அருங்காட்சியகம் ஒன்றை அமைத்து காட்சிப்படுத்தி உள்ளனர். இந்நிலையில், கடந்த ஆண்டு டிசம்பர் 17 மற்றும் 18-ம் தேதிகளில் பெய்த கனமழை அருங்காட்சியகத்தையும் விட்டு வைக்கவில்லை.

ஆதிச்சநல்லூரில் உள்ள அகழாய்வுக் குழிகளை வெள்ளநீர் மூழ்கடித்தது. மேலும் அங்குள்ள முதுமக்கள் தாழி உள்ளிட்ட தொல்பொருள்களும் வெள்ளத்தில் சிக்கி உடைந்து சேதமடைந்தன. மேலும், அருங்காட்சியகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவரும் வெள்ளத்தில் சேதமடைந்து.

இந்த நிலையில் தூத்துக்குடிக்கு நேற்று சென்ற திமுக எம்.பி.கனிமொழி, கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டார். மேலும் சேதமடைந்த பொருட்கள் குறித்து ஆய்வு மேற்கொண்ட அவர், அங்கு எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார். இதனைத் தொடர்ந்து பாதிப்புகள் குறித்து அறிக்கை அளிக்கும்படி அதிகாரிகளை அவர் கேட்டுகொண்டார்.

# உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.5.50 லட்சம் கோடி அளவுக்கு முதலீடுகளை ஈர்க்க தமிழ்நாடு அரசு திட்டம்



சென்னை : ஜன. 5, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.5.50 லட்சம் கோடி அளவுக்கு முதலீடுகளை ஈர்க்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

சென்னையில் ஜன.7, 8-ம் தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது. உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடர்பாக தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, டி.ஆர்.பி.ராஜா, உதயநிதி ஸ்டாலின், அரசு அதிகாரிகள், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழில் துறை செயலாளர் அருண் ராய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடர்பாக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரிவான ஆலோசனை நடத்தினார். இந்நிலையில், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.5.50 லட்சம் கோடி அளவுக்கு முதலீடுகளை ஈர்க்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், தைவான் உட்பட உலகின் பல நாடுகளின் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன. தொழில்துறை, ஆட்டோமொபைல், எரிசக்தித்துறை, தகவல் தொழில்நுட்ப துறை உள்ளிட்ட துறைகளில் அதிக முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன.

தொழில்துறை சார்ந்த முதலீடுகளுக்கான புரிந்துணர்வுஒப்பந்தம் 'தொழில் வழிகாட்டி மையம்' மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. சுகாதாரம், வீட்டு வசதித்துறை, கைத்தறித்துறை, சுற்றுலா துறைகளிலும் அதிக முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன. எரிசக்தித்துறையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்து அதிக முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன. உலக முதலீட்டாளர் மாநாட்டின் தொடக்க விழா நிகழ்ச்சியை பள்ளி, கல்லூரிகளில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# திருப்பத்தூரில் தியான வகுப்பிற்குச் சென்ற வாலிபர் இருவர் பலி : பைக் மீது பஸ் மோதி விபத்து



திருப்பத்தூர் : ஜன. 5, திருப்பத்தூரில் தியான வகுப்புக்குச் சென்ற 2 வாலிபர்கள் சாலை விபத்தில் உயிரிழந்த சம்பவம் வாகன ஓட்டிகள் மற்றும் அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியது.

திருப்பத்தூர், முல்லை பகுதியைச் சேர்ந்தவர் முருகேஷ். இவரது மகன் பிரவீன் குமார் (27). அதே பகுதியைச் சேர்ந்தவர் ஆறுமுகம். இவரது மகன் அருள்குமார் (24). இருவரும் நெருங்கிய நண்பர்கள். இவர்கள் இருவரும் , திருப்பத்தூர் பகுதியில் நடக்கும் தியான வகுப்புக்கு தினமும் பைக்கில் ஒன்றாக சென்றுவிட்டு மீண்டும் வீட்டுக்கு வருவது வழக்கம்.

இந்த நிலையில் நேற்று காலை வழக்கம்போல் இருவரும் தியான வகுப்புக்கு சென்று கொண்டு இருந்தனர். அப்போது, திருப்பத்தூரில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு ஆலங்காயம் நோக்கி அரசு பஸ் சென்று கொண்டிருந்தது.

அப்போது அந்த வழியாக பள்ளி வாகனம் வந்ததால் இருசக்கர வாகனத்தில் வந்த இந்த 2 வாலிபர்களும் அதை முந்தி செல்ல முயன்றதாக தெரிகிறது. அப்போது எதிரில் வந்த அரசு பேருந்து இவர்களது பைக் மீது மோதியதில் பிரவீன் குமார், அருள்குமார் ஆகியோர் தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த வாகன ஓட்டிகள் இந்த சம்பவம் குறித்து போலீஸாருக்கு தகவல் அளித்தனர். அதன்படி குருசிலாப்பட்டு போலீஸார் விரைந்து வந்து 2 வாலிபர்களின் சடலங்களையும் மீட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

மேலும், இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தியான வகுப்புக்கு சென்ற வாலிபர்கள் சாலை விபத்தில் தலை நசுங்கி உயிரிழந்த சம்பவம் அந்த பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கார்கே முன்னிலையில் காங்கிரஸில் இணைந்தார் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் சகோதரி ஒய்.எஸ்.ஷர்மிளா




புதுடெல்லி: ஜன. 5, ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் சகோதரியும், ஒய்எஸ்ஆர் தெலங்கானா கட்சியின் தலைவருமான ஒய்.எஸ்.ஷர்மிளா நேற்று தனது கட்சியை காங்கிரஸுடன் இணைத்துக் கொண்டார். இன்னும் சில மாதங்களில் மக்களவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்.

ஆந்திரா முதல்வர் ஒய்.எஸ்.ஜெகன்மோகன் ரெட்டியின் தங்கையான ஒய்.எஸ்.ஷர்மிளா, தான் நிறுவிய ஒய்.எஸ்.ஆர்.தெலங்கானா கட்சியை காங்கிரஸ் கட்சியுடன் இணைக்கப் போகிறார் என்ற பேச்சுகள் அண்மையில் திடீரென எழுந்தன. இதையடுத்து, கடந்த நவம்பர் 3 ஆம் தேதி முக்கிய அறிவிப்பு ஒன்றை அவர் வெளியிட்டார். அதில், "தெலங்கானாவில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. தேர்தலில் வாக்குகள் பிளவுபடுவதைத் தடுக்க காங்கிரஸுக்கு எனது ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளேன்" என அறிவித்து கவனம் பெற்றார். இந்நிலையில், ஒய்.எஸ்.ஷர்மிளா நேற்று காலை டெல்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே மற்றும் எம்.பி., ராகுல் காந்தி முன்னிலையில் காங்கிரஸில் இணைந்தார். அதோடு தனது கட்சியையும் காங்கிரஸுடன் இணைந்துக் கொண்டார். இன்னும் சில மாதங்களில் மக்களவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது கவனம் ஈர்த்துள்ளது.

ஒய்எஸ்ஆர் தெலங்கானா கட்சியை காங்கிரஸில் இணைத்த பிறகு ஒய்.எஸ்.சர்மிளா கூறுகையில், "ஒய்எஸ்ஆர் தெலங்கானா கட்சியை காங்கிரஸ் கட்சியுடன் இணைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஒய்எஸ்ஆர் தெலங்கானா கட்சி இன்று (ஜன. 4) முதல் இந்திய தேசிய காங்கிரஸின் ஓர் அங்கமாக இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. காங்கிரஸ் நம் நாட்டின் மிகப்பெரிய மதச்சார்பற்ற கட்சியாகும், அது எப்போதும் இந்தியாவின் உண்மையான கலாச்சாரத்தை நிலைநிறுத்தி, நமது தேசத்தின் அடித்தளத்தை கட்டியெழுப்புகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமைச்சர் சேகர்பாபு ஆய்வு

# கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைக்க சிஎம்டிஏ நிதி ஒதுக்கீடு



சென்னை : ஜன. 5, கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு இடையூறாக உள்ள மேலும் ஒரு சுவரை அகற்ற அமைச்சர் சேகர்பாபு உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கெனவே ஒரு இடத்தில் மதில் சுவர் அகற்றப்பட்ட நிலையில் மேலும் ஒரு சுவரை அகற்ற அமைச்சர் சேகர்பாபு ஆணையிட்டுள்ளார். கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் அமைச்சர் சேகர் பாபு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, பேருந்து முனையத்தில் மேற்கொள்ள உள்ள பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் பயணிகளுக்கு இடைஞ்சலாக உள்ள சுவரை இடிக்க அதிகாரிகளுக்கு அமைச்சர் சேகர் பாபு உத்தரவிட்டார்.

ஏற்கனவே கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் மாநகரப்பேருந்துகள் இருக்கும் இடத்தில் இருந்து வெளியூர் செல்லும் பேருந்துகள் இருக்கும் இடத்திற்கு நடுவில் பயணிகளுக்கு தொந்தரவாக இருந்த சுவர் இடிக்கப்பட்டது. இந்த நிலையில், இடையூறாக உள்ள மேலும் ஒரு சுவரை அகற்ற அமைச்சர் சேகர்பாபு உத்தரவிட்டுள்ளார். மேலும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் கூடுதல் பேட்டரி வாகனங்களை அதிகரிக்க சேகர்பாபு ஆணையிட்டுள்ளார்.

இதனிடையே கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைக்க சிஎம்டிஏ சார்பில் முதற்கட்டமாக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்த தொகை ரூ.20 கோடியை தெற்கு ரயில்வேக்கு சிஎம்டிஏ வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வண்டலூர் அருகே கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகே புது ரயில் நிலையம் அமைகிறது. கிளாம்பாக்கம் ரயில் நிலையம் மாநில நிதியில் அமைய உள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் ரயில்நிலைய பணிகளை நிறைவு செய்ய ரயில்வேக்கு சிஎம்டிஏ கோரிக்கை வைத்துள்ளது. துறை ரீதியாக நிதி கிடைத்து ரயில் நிலையம் அமைக்க நீண்ட காலம் ஆகும் என்பதால் சிஎம்டிஏ நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ரயில் நிலைய பணிகளுக்கான செலவை கணக்கில் கொண்டு அடுத்தடுத்து நிதி ஒதுக்கப்படும் என்றும் சிஎம்டிஏ தெரிவித்துள்ளது.

# சாதிப் பெயரைக் கூறி ஜல்லிக்கட்டு காளைகளை அவிழ்க்கக் கூடாது



மதுரை : ஜன. 5, "ஜல்லிக்கட்டு போட்டியின் போது காளையின் உரிமையாளர் பெயரோடு சாதிப் பெயரைக் கூறி ஜல்லிக்கட்டு காளைகளை அவிழ்க்கக் கூடாது என்றும் ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கும் முன்பு தீண்டாமை உறுமொழி எடுப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும்" என்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டியின் போது காளைகள் அவிழ்க்கும் போது உரிமையாளர் பெயரோடு சாதி பெயரை குறிப்பிடக் கூடாது என்ற உயர்நீதிமன்ற உத்தரவை முறையாக பின்பற்ற மதுரையை சேர்ந்த செல்வகுமார் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், 'தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி தை மாதம் தொடங்கி பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும். ஜல்லிக்கட்டு போட்டிக்கு தடை விதித்த பின்னர் நீண்ட போராட்டத்திற்கு பின் தமிழ்நாடு அரசு சிறப்புச் சட்டம் இயற்றி ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தி வருகிறது.

மதுரையில் பொங்கல் பண்டிகையையொட்டி உலகப்புகழ்பெற்ற அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகள் சிறப்பு வாய்ந்தவை. 2019-ம் ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டிகளை சாதி மத ரீதியாக நடத்தக்கூடாது, காளைகள் அவிழ்க்கப்படும் போது உரிமையாளர்களின் பெயர்களோடு சாதிப்பெயரை பயன்படுத்தி அறிவிக்கக்கூடாது என நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் சாதிப்பெயரை தவிர்க்க வேண்டும் என நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது.

ஆனால், இன்னமும் ஜல்லிக்கட்டு போட்டிகளில் அரசு அதிகாரிகள் முன்பாகவே, சாதிப்பெயர்களைச் சொல்லி காளைகள் அவிழ்க்கப்படுகின்றன. இது உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது. எனவே, இந்தாண்டு நடைபெறக்கூடிய ஜல்லிக்கட்டு போட்டிகளின் போது காளைகள் குறித்த அறிவிப்பின் போது உரிமையாளர்களின் பெயரோடு சாதிப்பெயர்களை அறிவிக்கக்கூடாது எனவும், போட்டிகளில் பங்கேற்கும் அனைவரும் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி கட்டாயம் எடுக்க வேண்டும் என உத்தரவிட வேண்டும் எனவும் கோரி இருந்தார்.

இந்த மனு நேற்று நீதிபதிகள் கிருஷ்ணகுமார், விஜயகுமார் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "ஜல்லிக்கட்டு போட்டியின் போது காளையின் உரிமையாளர் பெயர் வாசிக்கப்படும். அப்பொழுது குறிப்பிட்ட சாதியின் பெயர்களை சொல்லி காளை அவிழ்த்து விடப்படுகிறது

இவ்வாறு செய்யக்கூடாது என 2019-ம் ஆண்டு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால், அதனை பின்பற்றுவதில்லை அந்த உத்தரவை முறையாக பின்பற்ற உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அதேபோல் ஜல்லிக்கட்டு போட்டி ஆரம்பிக்கும் முன் தீண்டாமை உறுதிமொழி எடுக்கவும் உத்தரவிட வேண்டும்" என வாதிட்டார்.

அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "உயர் நீதிமன்ற தீர்ப்பை முறையாக பின்பற்றுவோம்" என உறுதி அளித்தார். இதனைத் தொடர்ந்து, " சாதி பெயர் சொல்லி காளை அவிழ்க்கக்கூடாது என்ற நீதிமன்ற உத்தரவை முறையாக பின்பற்ற வேண்டும். ஜல்லிக்கட்டுப் போட்டிகளை தொடங்கும் முன்பாக தீண்டாமை உறுதிமொழி எடுப்பது குறித்த மனுதாரரின் மனுவை பரிசீலனை செய்து உரிய முடிவு எடுக்க வேண்டும்" என உத்தரவிட்ட நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்தனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பெங்களூரில் இருந்து

# தென்காசி வழியாக திருநெல்வேலிக்கு பொங்கல் சிறப்பு ரயில் இயக்க வேண்டும்



சங்கரன்கோவில் : ஜன. 5, இந்திய ரயில்வே தென், மேற்கு பொது மேலாளருக்கு ரயில்வே ஆலோசனைக் குழு உறுப்பினர் ராஜா எம்எல்ஏ எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

பொங்கல், தமிழகத்தில் கொண்டாடப்படும் முக்கியமான பண்டிகைகளில் ஒன்றாகும். அறுவடையைக் கொண்டாட குடும்பங்கள் ஒன்று கூடும் நேரம் இது, அது தமிழ் மக்களுக்கு மகத்தான கலாச்சார மற்றும் உணர்ச்சி மதிப்பைக் கொண்டுள்ளது. பெங்களூருவில் உள்ள சிவகாசி, ராஜபாளையம், சங்கரன்கோவில், தென்காசி, பாவூர்சத்திரம், அம்பாசமுத்திரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான தமிழர்கள், தங்கள் குடும்பத்துடன் பொங்கலைக் கொண்டாட தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதில் ஆர்வமாக உள்ளனர்.

இந்த வழித்தடத்தில் ரயில் சேவைகள் எதுவும் இல்லை. அப்பகுதி மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பெங்களூருவில் இருந்து ராஜபாளையம், தென்காசி, பாவூர்சத்திரம், அம்பாசமுத்திரம் வழியாக திருநெல்வேலிக்கு சிறப்பு ரயில் இயக்கப்பட்டால் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் எனவும், எனவே இது குறித்து பரிசீலனை செய்து இரயில்வே அதிகாரிகள் இந்த கோரிக்கையை ஏற்று இந்த சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்வதாகவும், இதனால் அங்கு வாழும் தமிழ் மக்கள் பொங்கல் பண்டிகைக்கு தங்கள் சொந்த ஊருக்கு வந்து பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாட ஏதுவாக இருக்கும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# மும்பையில் ரசாயனத் தொழிற்சாலையில் தீ விபத்து : பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல்



மும்பை : ஜன. 5, மும்பையில் ரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

மகாராஷ்டிரா மாநிலம். நவி மும்பை பகுதியில் இயங்கி வரும் ரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதனால், வானில் கரும்புகை எழுந்து, அந்த பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். தீ வேகமாகப் பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் தீயணைப்பு வீரர்கள் திணறி வருகின்றனர்.

தீ முழுமையான கட்டுப்பாட்டிற்கு வந்த பிறகே, அதற்கான காரணம் என்ன என்பது தெரிய வரும் என போலீஸார் தெரிவித்துள்ளனர். மேலும், அதிகாலை நேரம் விபத்து நேர்ந்தால், உயிர்ச் சேதம் ஏது ஏற்படவில்லை என கூறப்பட்டுள்ளது. இந்த தீ விபத்து காரணமாக எழுந்துள்ள புகையால், அந்தப்பகுதி மக்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மும்பையில் தொடரும் தீ விபத்துக்களில் கடந்த ஓராண்டில் 33 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 2023-ம் ஆண்டில் மட்டும் மும்பை நகருக்கு உட்பட்ட பகுதிகளில் 5,074 தீ விபத்து சம்பவங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது 2022-ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 15 சதவீதம் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 655 தீவிபத்து சம்பவங்கள் தீபாவளியன்றும், 519 தீ விபத்துக்கள் பிப்ரவரி மாதத்திலும் ஏற்பட்டுள்ளதாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணொலி காட்சி வாயிலாக ஆஜரான செந்தில் பாலாஜி 14வது முறையாக நீதிமன்ற காவல் நீட்டிப்பு



சென்னை : ஜன. 5- அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை 14வது முறையாக நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்ட வழக்கில் அமலாக்கத் துறையினர் கடந்த ஆண்டு ஜூன் 14-ல் கைதான அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக, கடந்த ஆண்டு ஆகஸ்ட் 12-ம் தேதி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 3 ஆயிரம் பக்கம் கொண்ட குற்றப்பத்திரிக்கை, மற்றும் ஆவணங்களை அமலாக்கத்தையினர் டிரங்கு பெட்டியில் தாக்கல் செய்தனர்.

ஜாமீன் நிராகரிக்கப்பட்ட நிலையில் புழல் சிறையில் உள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.அல்லி முன்பாக, காணொலி காட்சி மூலமாக ஆஜர்படுத்தபட்டார்.

இதனையடுத்து செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஜனவரி 11-ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டார். இதன் மூலம் 14வது முறையாக அவரது காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், செந்தில்பாலாஜியின் ஜாமீன் கோரி 3வது முறையாக தாக்கல் செய்த மனு வரும் திங்கட்கிழமை (ஜனவரி 8) விசாரணைக்கு வரவுள்ளது. இந்த மனு குறித்துப் பதிலளிக்க அமலாக்கத் துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் எழுத்துக்களால் உருவான 20 அடி உயர திருவள்ளுவர் சிலை : ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்



கோவை : ஜன. 5, கோவை குறிச்சி குளக்கரையில் தமிழ் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட 20 அடி உயரம் கொண்ட திருவள்ளுவர் சிலையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் இன்று திறந்து வைக்கிறார்.

கோவை மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக மாநகராட்சியில் உள்ள 7 குளங்கள் சீரமைக்கப்பட்டு அழகுபடுத்தபட்டுள்ளன. அத்துடன், குளக்கரைகளில் பொழுதுபோக்கு அம்சங்கள் ஏற்படுத்தபட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக பொள்ளாச்சி சாலையில் உள்ள குறிச்சி குளம் பகுதியில் ஸ்மார்ட் சிட்டி பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது.

இதில் தமிழ் எழுத்துகளைக் கொண்டு சுமார் 2.5 டன் எடையில், இரும்பால் 20 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ள இந்த திருவள்ளுவர் சிலையை இன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் நாளை திறந்து வைக்கிறார்.

இதனையடுத்து திருவள்ளுவர் சிலை மற்றும் அந்த குளத்தினைச் சுற்றியுள்ள பகுதிகளில் தூய்மைப்படுத்தும் பணிகளை மாநகராட்சி ஊழியர்கள் செய்து வருகின்றனர்.

கோவை பெரிய குளம் மற்றும் வாலாங்குளம் பகுதிகளில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பூங்காக்களில், கழிவு இரும்பில் செய்யப்பட்ட சிலைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், இது கோவை மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றிருந்தது. மேலும் குமாரசாமி குளக்கரையில் பிரம்மாண்ட கொரில்லா சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. பொழுதுபோக்கு அம்சங்கள் பெரிதாக இல்லாத கோவை மாநகரில் தற்போது இந்த குளக்கரைகள் அதிகளவில் மக்களை ஈர்க்கும் இடங்களாக மாறி வருகிறது.

வார இறுதி நாட்களில் குளக்கரைகளில் கூடும் மக்கள், இந்த பூங்காக்களின் குடும்பத்தினருடன் தங்களது நேரத்தைச் செலவிட்டு வருகின்றனர். இந்நிலையில் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைக்கவுள்ள புதிய திருவள்ளுவர் சிலை, கோவை மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# டிராபி டெஸ் சாம்பியன்ஸ் கால்பந்து

## எம்பாப்பேவின் பிஎஸ்ஜி அணி சாம்பியன்



**பாரீஸ் : ஜன. 5,**

**பிஎஸ்ஜி அணி தரப்பில் நட்சத்திர வீரர் எம்பாப்பே மற்றும் லீ காங் இன் ஆகியோர் தலா 1 கோல் அடித்தனர்.**

பிரெஞ்சு கால்பந்து கூட்டமைப்பு டிராபி டெஸ் சாம்பியன்ஸ் கால்பந்து தொடரை நடத்துகிறது. இது லீக் 1 சாம்பியனுக்கும், கூபே டி பிரான்ஸ் சாம்பியனுக்கும் இடையே நடைபெறும் போட்டி ஆகும்.

அதன்படி இந்த வருடம் இதில் பிஎஸ்ஜி மற்றும் துலூஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடிய பிஎஸ்ஜி 2-0 என்ற கோல் கணக்கில் துலூஸ் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது. பிஎஸ்ஜி அணி தரப்பில் நட்சத்திர வீரர் எம்பாப்பே மற்றும் லீ காங் இன் ஆகியோர் தலா 1 கோல் அடித்தனர். இந்த வெற்றியின் மூலம் பிஎஸ்ஜி அணி இந்த புத்தாண்டை சிறப்பாக தொடங்கி உள்ளது.

# தென் ஆப்பிரிக்காவை எளிதில் வீழ்த்தி தொடரை சமன் செய்தது இந்தியா

**கேப்டவுன் : ஜன. 5,**

**தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது. இதன்மூலம் டெஸ்ட் தொடரை 1 – 1 என்று சமன் செய்துள்ளது.**

இரண்டாவது இன்னிங்ஸில் 79 ரன்கள் இலக்கை துரத்திய இந்திய அணிக்கு ஓப்பனிங் பேட்ஸ்மேன் ஜெய்ஸ்வால் 28 ரன்கள் எடுத்து விக்கெட்டானார். ஷுப்மன் கில் 10 ரன்களில் வீழ்ந்தாலும், ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இணைந்து அணியை வெற்றிபெற முயற்சித்தனர். ஆனால், 12 ரன்கள் எடுத்திருந்த விராட் கோலி எதிர்பாராத விதமாக கேட்ச் ஆனார். எனினும், ஷ்ரேயாஷ் ஐயர் பவுண்டரி அடித்து வெற்றிபெறவைத்தார்.

சிறிய இலக்கு என்பதால் இந்திய வீரர்கள் டி20 பாணியில் பவுண்டரிகளை விளாசி விரைவாகவே இலக்கைநோக்கிநகர்ந்தனர். இதனால், 12 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 80 ரன்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. ரோகித் சர்மா 17 ரன்கள் எடுத்திருந்தார். முதல் டெஸ்டில் இன்னிங்ஸ் தோல்வி கண்டிருந்த இந்திய அணி, இந்த வெற்றியின் மூலம் டெஸ்ட் தொடரை 1 – 1 என்று சமன் செய்தது.

முன்னதாக, கேப்டவுனில் உள்ள நியூலேண்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 55 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. முகமது சிராஜின் சீரான வேகம், துல்லியம், ஸ்விங் ஆகியவற்றை தாக்குப்பிடிக்க முடியாமல் 23.2 ஓவர்களில் 55 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. முகமது சிராஜ் 9 ஓவர்களை வீசி 3 மெய்டன்களுடன் 15 ரன்களை வழங்கி 6 விக்கெட்களை வீழ்த்தினார். ஜஸ்பிரீத் பும்ரா 8 ஓவர்களை வீசி ஒரு மெய்டனுடன் 25 ரன்களை வழங்கி 2 விக்கெட்களையும், முகேஷ் குமார் 2.2 ஓவர்களை வீசி 2 மெய்டன்களுடன் ரன் ஏதும் கொடுக்காமல் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இதையடுத்து களமிறங்கிய இந்திய அணி 34.5 ஓவரில் 153 ரன்களுடன் சுருண்டது. ரபாடா வீசிய





3வது ஓவரில் போல்டானார் யஷஸ்வி. 15-வது ஓவரில் நந்த்ரே பர்கர் வீசிய பந்தில் ரோகித் சர்மா 39 ரன்களில் விக்கெட்டானார். 21-வது ஓவர் வரை தாக்குப்பிடித்த சுப்மன் கில் நந்த்ரே பர்கரின் பந்தில் கேட்ச் கொடுத்து அவுட்டாகி 36 ரன்களில் கிளம்பினார். விராட் கோலி மட்டும் ஒருபுறம் நிலைத்து ஆட, மறுபுறம் வந்த ஸ்ரேயாஸ் ரன் எதுவும் எடுக்காமல் பெவிலியன் திரும்ப, 33வது ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்த இந்திய அணி 153 ரன்கள் சேர்த்திருந்தது.

அடுத்து லுங்கி இங்கிடி வீசிய 34வது ஓவரில், கே.எல். ராகுல் 8 ரன்களுடனும், ஜடேஜா, பும்ரா டக்அவுட்டாக ஒரே ஓவரில் 3 விக்கெட்டுகளை பறிகொடுத்தது இந்திய அணி. அத்துடன் ரன் எதுவும் இல்லாமல் மெய்டன் ஆனது அந்த ஓவர். அடுத்த ஓவரில் விராட் கோலி 46 ரன்களில் அவுட்டாக, தொடர்ந்து பிரசித் கிருஷ்ணா, முகமது சிராஜ் அடுத்தடுத்து டக் அவுட்டாக 34.5 ஓவரில் 153 ரன்களுடன் சுருண்டது இந்திய அணி. தென் ஆப்பிரிக்க அணி தரப்பில் நந்த்ரே பர்கர், லுங்கி இங்கிடி, ரபாடா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதன் மூலம் முதல் இன்னிங்ஸ் முடிவில் இந்திய அணி 98 ரன்கள் முன்னிலையில் இருந்தது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய தென் ஆப்பிரிக்க அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 17 ஓவர் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 62 ரன்களைச் சேர்த்தது. நேற்று இரண்டாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த தென் ஆப்பிரிக்க அணி பும்ராவின் பந்துவீச்சில் ஒருபுறம் விக்கெட்களை இழந்தாலும், மறுபுறம் ஐடன் மார்க்ரம் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் அதிரடியாக விளையாடி சதம் பதிவு செய்தார்.

ஓப்பனிங் இறங்கி செஞ்சூரி அடித்து 106 ரன்கள் எடுத்திருந்த மார்க்ரமின் விக்கெட்டை சிராஜ் வீழ்த்தினார். இறுதியில் மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க தென் ஆப்பிரிக்க அணி 36.5 ஓவர்களுக்கு 176 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இந்திய தரப்பில் பும்ரா 6 விக்கெட், முகேஷ் குமார் 2 விக்கெட், பிரசித் கிருஷ்ணா மற்றும் சிராஜ் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். தென் ஆப்பிரிக்க அணி 78 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளதை அடுத்து இந்திய அணிக்கு 79 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அதன்பின், 12 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 80 ரன்கள் எடுத்து 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

# கேப்டவுன் டெஸ்ட் போட்டியில் ஒரே நாளில் 23 விக்கெட்டுகள் வீழ்ந்தது குறித்து சச்சின் கருத்து



**கேப்டவுன் : ஜன. 5,**

**இந்தியா - தென் ஆப்பிரிக்கா இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நடைபெற்று வருகிறது.**

இந்தியா-தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நேற்று முன்தினம் புதன்கிழமை தொடங்கியது. இந்த போட்டியில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா அணியின் கேப்டன் டீன் எல்கர் பேட்டிங்கைத் தேர்வு செய்தார்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய தென் ஆப்பிரிக்கா வெறும் 55 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இந்திய அணியில் அதிகபட்சமாக சிராஜ் 6 விக்கெட்டுகளும், பும்ரா மற்றும் முகேஷ் குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணியும் தடுமாற்றத்துடனே விளையாடியது. தென் ஆப்பிரிக்க அணியின் பந்துவீச்சாளர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை வீழ்த்தி இந்திய அணிக்கு கடும் நெருக்கடி கொடுத்தனர். இதனைத்தொடர்ந்து 34.4 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த இந்திய அணி 153 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இந்திய அணியில் அதிகபட்சமாக விராட் கோலி 46 ரன்கள் அடித்தார்.

பின்னர் 98 ரன்கள் பின்தங்கிய நிலையில் தங்களது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென் ஆப்பிரிக்க அணி 3 விக்கெட்டுகளை இழந்து 62 ரன்கள் அடித்திருந்தபோது முதல் நாள் ஆட்ட நேர முடிவுக்கு வந்தது. இந்நிலையில் ஒரே நாளில் 23 விக்கெட்டுகள் விழுந்தது குறித்துபல முன்னாள் வீரர்கள் தங்களது கருத்துக்களை கூறி வரும் வேளையில் சச்சின் டெண்டுல்கர் தனது எக்ஸ் பக்கத்தில் ஒரு கருத்தினை பதிவிட்டுள்ளார்.

அதில், ‘2024-ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே 23 விக்கெட்டுகள் ஒரே நாளில் வீழ்ந்துள்ளன. நம்ப முடியவில்லை! தென் ஆப்பிரிக்க அணி ஆல் அவுட்டானபோது நான் விமானத்தில் ஏறினேன். பின்னர் வீட்டுக்கு வந்து பார்த்தால் மீண்டும் தென் ஆப்பிரிக்க அணியே திரும்பவும் 3 விக்கெட்டுகளை இழந்திருந்தது. இந்த போட்டியில் நான் எங்கு எதை தவறவிட்டேன்? என்று எனக்கு புரியவில்லை’ என்று சுவாரசியமான கருத்தை பதிவிட்டுள்ளார். அவரது இந்த கருத்து இணையத்தில் வைரலாகி வருகிறது.

# கேப்டவுன் பிட்ச் விவகாரம் : தென் ஆப்பிரிக்க கேப்டன் எல்கர் அதிர்ச்சியும், பின்னணியும்

**கேப்டவுன் : ஜன. 5,**

**கேப்டவுனில் நேற்று முன்தினம் புதன்கிழமை தொடங்கிய 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் 23 விக்கெட்டுகள் விழுந்து எதிர்மறை உலக சாதனையாக அமைந்தது. மொகமது சிராஜின் பந்துகள் அவருக்கே புரியாமல் பவுன்ஸுடனும் ஸ்விங்குடனும் சென்றது அவரது முகத்தில் மட்டற்ற மகிழ்ச்சியை கிளப்ப பேட்டர்களின் முகத்தில் பீதியைக் கிளப்பியது.**

ஒரே நாளில் டாஸ் வென்று பேட் செய்த அணி 2வது முறையாக களமிறங்கி அதிலும் 3 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தோல்வியின் பிடியில் சிக்கியுள்ளதோடு இந்திய அணி தொடரை ட்ரா செய்து உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிகளில் கொஞ்சம் தேற்றிக் கொள்ளும். ஏனெனில் கடந்த செஞ்சூரியன் டெஸ்ட் போட்டியில் தாறுமாறாக இன்னிங்ஸ் தோல்வி அடைந்து புள்ளிகளை இழந்ததோடு குறித்த நேரத்தில் ஓவர்களை முடிக்காததற்காக பாயிண்டுகள் குறைக்கப்பட்டு விட்டன. ஆகவே இந்த டெஸ்ட் வெற்றி பல முனைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

விராட் கோலியைத் தவிர இந்திய பேட்டர்கள் ஒருவருக்கும் இத்தகைய பிட்சில் ஆடுவதற்கான டெக்னிக் இல்லை. 2002-ல் நியூஸிலாந்தில் இப்படிப்பட்ட பிட்ச்களை டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கு அமைத்தனர், ஆனால் அதிலும் சேவாக் 2 சதங்களை விளாசி தான் யார் என்று நிரூபித்தார். விராட் கோலிதான் உலகின் கடைசி டெஸ்ட் சாம்பியன் வீரராக திகழ்வார்போல. அவரது ஆட்டம் அப்படி. ஏனெனில் தென் ஆப்பிரிக்கா பவுலர்கள் எந்த இடத்தில் பந்தை பிட்ச் செய்வார்களோ அதே இடத்தில் இந்திய பவுலர்களை வீசச்சொல்லி பயிற்சி செய்திருக்கிறார் கோலி. இந்த உழைப்பும் அந்த மண்ணை வெற்றி கொள்ள வேண்டும் என்ற வெறியும் இந்திய அணியில் வேறொருவருக்கும் இல்லை என்பது போட்டியை சீரியஸாகப் பார்ப்பவர்களுக்குப் புலப்படும்.

இந்நிலையில், உள்ளூர் அணிக்கே அவர்களது பிட்சின் அதிவேகத்தன்மையும் சீரற்ற பவுன்ஸும் அதிர்ச்சியளித்துள்ளது.



இதனை தன் கடைசி டெஸ்ட் போட்டியில் கேப்டனாக பொறுப்பேற்றுள்ள டீன் எல்கரே கூறியுள்ளார்.

முதல் நாள் ஆட்டம் முடிந்த பிறகு ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனலில் பேசும்போது டீன் எல்கர் கூறும்போது, “பொதுவாக இங்கு பிட்ச் கொஞ்சம் ஸ்லோவாகவே இருக்கும். பேட்டர்கள் அட்ஜஸ்ட் செய்து கொள்ள முடியும். ஆனால் முதல் நாளிலேயே பிட்ச் போகப்போக அதிக வேகம் எடுக்கத் தொடங்கியது. இது எதிர்பாராதது என்பதோடு ஆச்சரியமாகவும் இருந்தது.” என்றார்.

முன்னாள் வீரர் ஆஷ்வெல் பிரின்ஸ், “கேப்டவுன் பிட்ச் முதல் நாளில் இப்படி வேகமும் எழுச்சியும் கொண்டதாக நான் பார்த்ததில்லை. அதோடு சீரற்ற முறையில் பந்துகள் எழும்பியும் தாழ்வாகவும் வந்ததையும் நான் ஆச்சரியத்துடன் தான் பார்க்கிறேன். பொதுவாக பேட்டர்கள் பந்தின் வேகத்தையெல்லாம் ஆடிவிடுவார்கள். ஆனால் பவுன்ஸ் சீரற்ற முறையில் இருந்தால் அது கடினம்.. மிகக்கடினம். இதோடு பந்துகள் ஸ்விங் ஆகின.” என்றார்.

முகமது சிராஜ் 6 விக்கெட்டுகளை வீழ்த்தியதற்குக் காரணம் சீரற்ற பவுன்ஸ்தான். லுங்கி இங்கிடி ஒரே ஓவரில் 3 விக்கெட்டுகள் வீழ்த்திய முனையில் அதிஎழுச்சி கண்டது பந்துகள்.

எல்கர் மீண்டும் கூறுகையில், “சாதாரணக் கண்களில் பார்த்தால் பிட்ச் ஒன்றும் அவ்வளவு மோசமில்லை என்று தோன்றும். உள்நாட்டு கிரிக்கெட்டில் கூட இருந்தது போல் மோசமாக இருந்ததில்லை. பிட்ச் பயங்கரம் தான். பிட்ச் இப்படி இருக்கும் என்று தெரிந்திருந்தால் பேட்டிங் எடுத்திருக்க மாட்டேன். ஆனால் தெரியாமல் பேட்டிங் எடுத்ததால் அந்த முடிவு சரியே என்று கூறுவேன்” என்றார்.

அதேநேரம், இந்தப் பிட்சைத் தயாரித்தவர் தொழிலுக்குப் புதிது என்றும் இதுதான் அவரது முதல் டெஸ்ட் பிட்ச் என்றும் ஆஷ்வெல் பிரின்ஸ் கூறுகிறார். மேலும் பிரின்ஸ் கூறுகையில், “பிட்ச் பற்றிய விவாதத்தை நிறுத்தி விட்டு கிரிக்கெட்டைப் பார்த்தால், சிராஜ் தன் வாழ்க்கையின் சிறந்த பவுலிங்கை வீசினார்.

பொதுவாக இந்திய பவுலர்கள் சரியான இடத்தில் பந்தை பிட்ச் செய்தனர். பேட்டிங்கில் தென் ஆப்பிரிக்காவை விட சிறப்பாகவே ஆடினர். விராட் கோலி, எய்டன் மார்க்ரம், ரோகித் சர்மா போல் இந்தப் பிட்சில் ஆட வேண்டும். ஆனால் இரண்டு அணிகளுமே ஆடவில்லை எனும் போது பிட்ச் பற்றி கொஞ்சம் யோசிக்க வேண்டியுள்ளது” என்றார்.

வரலாறு சினிமா

# “எது செய்தாலும் குறை சொல்ல ஒரு கூட்டம்” நடிகர் தனுஷ் ஆதங்கம்



**சென்னை : ஜன. 5,**

**“எது செய்தாலும் ஒரு கூட்டம் குறை சொல்லிக்கொண்டே இருக்கிறது. எதைப் பேசினாலும் பார்த்துப் பார்த்து பேச வேண்டியுள்ளது” என நடிகர் தனுஷ் கூறியுள்ளார்.**

அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள ‘கேப்டன் மில்லர்’ படத்தின் ப்ரீ- ரிலீஸ் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை சென்னையில் நடைபெற்றது. இதில் நடிகர் தனுஷ், கன்னட நடிகர் சிவராஜ் குமார், நடிகை பிரியங்கா மோகன், இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷ், சந்தீப் கிஷன், இயக்குநர் அருண் மாதேஸ்வரன் உள்ளிட்ட ஒட்டுமொத்த படக் குழுவினரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில், மறைந்த நடிகர்கள் விஜயகாந்த், புனித் ராஜ்குமார் ஆகியோருக்கு இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பேசிய நடிகர் தனுஷ், “இந்தப் படத்தைப் பற்றி நினைக்கும்போது எனக்கு நினைவுக்கு வருவது ‘உழைப்பு’. அவ்வளவு உழைப்பு இதில் உள்ளது. இந்தப் படம் உங்களுக்குப் பிடிக்கும் என்று நம்புகிறேன். 2002-ம் ஆண்டிலிருந்து நான் சிறுகச் சிறுக சேர்த்த துளிகள் எல்லாம் இன்றைக்கு பெரும் வெள்ளமாக திரண்டு வந்துள்ளீர்கள். இயக்குநர் அருண் மாதேஸ்வரன் மற்றும் படக்குழுவினருடைய உழைப்பைப் பார்த்ததும் நான் கஷ்டப்பட்டேன் என்று சொல்லவே கூச்சமாக உள்ளது. அப்படியான உழைப்பு அவருடையது.

அருண், வெற்றி மாறன் என நான் சில இயக்குநர்களுடன் தொடக்கத்தில் இருந்தே வேலை பார்த்திருக்கிறேன். கேப்டன் மில்லர் படத்தின் லைனை 15 நிமிடங்கள் சொன்னார் அருண். மிகப்பெரிய ஸ்கேலில் இருந்தது படம். அப்போது அவரிடம் ஆக்‌ஷன் காட்சிகளை பண்ணிட்ட முடியுமா என கேட்டேன். இன்று படத்தைப் பார்க்கும்போது சிறப்பாக வந்துள்ளது. அருண், இந்தப் படம் மூலமாக உங்களுக்கு நிச்சயம் பெரிய பெயர் கிடைக்கும். இதே அரங்கில் உங்களுக்குக் கரவொலிகள் எழும்பும்” என வாழ்த்தினார்.

தொடர்ந்து, “இந்தப் படத்தின் கடைசி 30 நிமிடங்களைப் பார்க்கும்போது எனக்கு திருப்தியாக இருந்தது. பார்க்கும் உங்களுக்கும் அதுதான் தோன்றும் என நினைக்கிறேன். ‘மரியாதைதான் சுதந்திரம்’ என்கிற டேக்லைன் கேப்டன் மில்லர் படத்துக்கு வைக்கப்பட்டுள்ளது. இப்போது எதற்கு, இங்கே மரியாதை இருக்கிறது, யாருக்கு சுதந்திரம் இருக்கிறது, எது செய்தாலும் அதில் குறை சொல்ல ஒரு கூட்டம் இருந்துகொண்டே இருக்கிறது. எதைப்பேசினாலும் பார்த்துப் பார்த்து பேச வேண்டியுள்ளது. எது எதற்கோ ஓடுகிறோம் செய்கிறோம் ஆட்டம் எல்லாம் ஆடுகிறோம்.

நமது குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் போனால் அந்த ஆட்டம் நின்றுவிடும். நமது முக்கியத்துவம் எது என்று தெரிந்து விடும். இந்த படம் மிகவும் புதிதாக இருக்கும் என்று நம்புகிறேன். படம் உங்களுக்கு நிச்சயம் பிடிக்கும். மாரி செல்வராஜின் செயல்களால் அவர் மீதான மரியாதை கூடிக்கொண்டே போகிறது” என்றார். இறுதியில் “வடசென்னை 2-ம் பாகம், வரும் கண்டிப்பாக வரும். இத்தனை உள்ளங்கள் கேட்கும்போது கண்டிப்பாக வரும். அதை எப்படி மிஸ் பண்ணுவேன்” என தெரிவித்தார்.

# நடிகர் சங்க கட்டிடத்திற்கு விஜயகாந்த் பெயர் யாராலும் மறுக்க முடியாது என்கிறார் சசிகுமார்



**சென்னை : ஜன. 5,**

**நடிகர் சங்க கட்டிடத்திற்கு விஜயகாந்த் பெயர் வைக்கும் கோரிக்கை குறித்து நடிகர் சசிகுமாரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு அவர் பதிலளித்துள்ளார்.**

நடிகரும் தேமுதிக தலைவருமான விஜயகாந்த் கடந்த டிசம்பர் 28- ம் தேதி காலமானார். அவரது மறைவுக்கு பொதுமக்களும் திரையுலகினரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அவரது இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத பிரபலங்கள் இப்போது அவரது நினைவிடத்திற்கு வந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர். நேற்று நடிகர்கள் கார்த்தி, சிவகுமார், தயாரிப்பாளர் எஸ்.ஆர். பிரபு ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து நடிகர் சசிகுமாரும் விஜயகாந்த் நினைவிடத்திற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், “விஜயகாந்த் என்பவர் அரசியல் கட்சி தலைவர், நடிகர் என்பதையும் தாண்டி அவர் நல்ல மனிதர். ஒருவேளை இன்று அவர் இருந்திருந்தால் முதல்வர் ஆகியிருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. நடிகர் சங்கத் தலைவராக இருந்தபோது, அவர் பல நல்ல விஷயங்களைச் செய்திருக்கிறார். குறிப்பாக, சங்க கட்டிடத்திற்கு இருந்த கடனை பல நட்சத்திர கலைவிழாக்கள் நடத்தி அடைத்திருக்கிறார்” என்றார்.

நடிகர் சங்க கட்டிடத்திற்கு விஜயகாந்த் பெயரை வைப்பது குறித்தான கேள்விக்கு, “நிச்சயம் அந்த கோரிக்கையை யாராலும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு நல்லது செய்திருக்கிறார் விஜயகாந்த். விரைவில் அது குறித்து முடிவெடுத்து அறிவிப்பார்கள்” என்று சொன்னார் சசிகுமார்.

# “வாழ்நாள் முழுக்க குறையாகவே இருக்கும்” விஜயகாந்த் நினைவிடத்தில் கண்கலங்கிய கார்த்தி



**சென்னை : ஜன. 5,**

**“கேப்டன் விஜயகாந்த் மறைவுக்கு வரமுடியாதது என் வாழ்நாள் முழுக்க ஒரு பெரிய குறையாகவே இருக்கும்” என்று கோயம்பேட்டில் உள்ள விஜயகாந்த் நினைவிடத்தில் நேரில் அஞ்சலி செலுத்திய பின் நடிகர் கார்த்தி கண்கலங்கியபடி பேசினார்.**

நடிகரும் தேமுதிக நிறுவனத் தலைவருமான விஜயகாந்த் கடந்த சில தினங்களுக்கு முன்பு உடல்நலக் குறைவால் காலமானார். அவருடைய மறைவு இந்திய அளவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவகத்தில் உள்ள விஜயகாந்தின் நினைவிடத்தில் நடிகர் கார்த்தி தனது தந்தை நடிகர் சிவகுமாருடன் நேற்று அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது: “கேப்டன் நம்முடன் இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அவருடைய இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு அவருக்கு மரியாதை செய்ய முடியவில்லை என்பது என் வாழ்நாள் முழுக்க ஒரு பெரிய குறையாகவே இருக்கும். அவருடன் நெருங்கிப் பழக வாய்ப்பு கிடைத்ததில்லை.

நான் சிறுவனாக தி.நகரில் இருந்தபோது, அவருடைய வீட்டில் தினமும் யாருக்காவது சாப்பாடு போட்டுக் கொண்டே இருப்பார்கள். அவருடைய படங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். நடிகர் சங்கத்தில் நாங்கள் ஜெயித்தபிறகு அவரை நேரில் சந்தித்தபோது மிகவும் மகிழ்ச்சியுடன் பேசினார். நடிகர் சங்கத்தில் பெரிய சவால்களை சந்திக்கும் போதெல்லாம் அவரை நினைத்துக் கொள்வோம்.

அவர் மிகப்பெரிய ஆளுமை. நம்முடன் அவர் இல்லை என்பது பெரிய வருத்தம். எங்கள் மனதில் அவர் எப்போதும் இருப்பார். வரும் 19ஆம் தேதி அவருக்காக ஒரு இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்துள்ளோம். அவருடைய புகழ் எப்பவும் நிலைக்கும் வகையில் நாங்கள் செய்ய வேண்டிய விஷயங்கள், அரசிடம் வைக்க வேண்டிய கோரிக்கைகள் அனைத்தையும் அங்கு சொல்வோம்” என்று கார்த்தி கண்கலங்கிய படி பேசினார்.

தொடர்ந்து கார்த்தியின் தந்தை நடிகர் சிவகுமார், “நடிகர் விஜயகாந்துடன் இணைந்து பல படங்களில் நான் பணியாற்றியுள்ளேன். அவர் மிகச்சிறந்த மனிதர். அடுத்தவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் மிக உயர்ந்த இடத்தில் இருப்பவர். அவரிடம் இருந்து அந்தப் பண்பை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் உடல்நிலை நன்றாக இருந்திருந்தால், இந்நேரம் தமிழக முதல்வராக இருந்திருக்க வேண்டியவர்” என அவரைப் பற்றிய நினைவுகளை உருக்கமாகப் பகிர்ந்தார்.



வரலாறு உலகம்

# ஜப்பானில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கம் இதுவரை 73 பேர் உயிரிழந்ததாக அறிவிப்பு



**டோக்கியோ : ஜன. 5,**

**ஜப்பானில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் இதுவரை 73 பேர் உயிரிழந்துள்ளதாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது. மேலும் தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் நடந்து வருவதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.**

மரணமடைந்த அனைவரும் முதல் நிலநடுக்கம் ஏற்பட்ட இஷிகாவா மாகாணத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 33 ஆயிரத்துக்கு அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும், 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் தண்ணீர் சேவை துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கிய மக்களை மீட்கும் பணியில் ஆயிரக்கணக்கான வீரர்கள் கனமழையிலும், உறைய வைக்கும் குளிரிலும் ஈடுபட்டு வருகின்றனர். சேதமடைந்த சாலைகளால் தொலைதூரத்தில் உள்ள கிராமங்களில் மீட்புப்பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 1-ம் தேதி ஜப்பானில் அடுத்தடுத்து நிலநடுக்கம் பதிவானது. நோட்டோ தீபகற்பத்தில் இஷிகாவா மாகாணத்தில் ஏற்பட்ட முதல் நிலநடுக்கம் 7.6 ரிக்டராகப் பதிவானது. தொடர்ந்து ஏற்பட்ட நிலநடுக்கங்கள் 3.2 ரிக்டர் முதல் 7.5 ரிக்டர் வரை பதிவாகின.

அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. 5 மீட்டர் உயரம் வரை சுனாமி அலைகளை எழலாம் எனக் கணிக்கப்பட்ட நிலையில் அதிகபட்சமாக இஷிகாவா மாகாணத்தின் வாஜிமா துறைமுகத்தில் 1.2 மீட்டர் உயரத்துக்கு அலைகள் எழுந்தன. இதனையடுத்து அடுத்த நாளில் சுனாமி எச்சரிக்கையை ஜப்பான் அரசு வாபஸ் பெற்றது. ஜப்பானில் கடந்த 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட மிகப்பெரிய நிலநடுக்கம் இது என்ற ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# இரண்டு நாள் பயணமாக நேபாளம் சென்றார் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்



**காத்மாண்டு : ஜன. 5,**

**இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நேபாளம் சென்றுள்ளார்.**

தனது நேபாளம் பயணம் குறித்து எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள ஜெய்சங்கர், "2024ம் ஆண்டின் முதல் வெளிநாட்டுப் பயணமாக நேபாளம் வந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்த இரண்டு நாட்கள் நடைபெற உள்ள பல்வேறு நிகழ்வுகளை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

தலைநகர் காத்மாண்டு சென்ற ஜெய்சங்கரை, அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் என்.பி.சாத் விமான நிலையம் வந்து வரவேற்றார். இந்த பயணத்தின்போது இந்தியா - நேபாளம் கூட்டு ஆணையத்தின் 7-வது கூட்டத்தில் ஜெய்சங்கர் பங்கேற்க இருக்கிறார். இரு நாடுகளுக்கு இடையேயான அனைத்து இருதரப்பு உறவுகள் குறித்தும், ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டிய துறைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படும். நேபாள வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - நேபாளம் கூட்டு ஆணையம் 1987-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆணையத்தின் ஆய்வுக் கூட்டத்தில் இரு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் பங்கேற்பது வழக்கம். தனது இந்த இரண்டு நாள் பயணத்தின்போது நேபாள அதிபர் ராமசந்திர பாடெல், பிரதமர் புஷ்ப கமல் தஹால் உள்பட அந்நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களை ஜெய்சங்கர் சந்திக்க உள்ளார். ஜெய்சங்கரை கவுரவப்படுத்தும் நோக்கில் அவருக்கும், அவரோடு சென்றுள்ள இந்திய தூதுக்குழுவுக்கும் நேபாள வெளியுறவு அமைச்சர் என்.பி.சாத் இரவு விருந்து அளிக்க உள்ளார்.

முன்னதாக காத்மாண்டு போஸ்ட் இதழுக்கு பேட்டி அளித்திருந்த என்.பி. சாத், "இந்தியா உடன் இரண்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக திட்டமிடப்பட்டுள்ளது. அதோடு, 30-க்கும் மேற்பட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க இருக்கிறோம். குறிப்பாக, போக்குவரத்து, பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தகம், மின்சாரம், நீர் வளம், கலாச்சாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வது குறித்து விவாதிக்க இருக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# மஸ்கை விமர்சித்த ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பியதா ஸ்பேஸ்எக்ஸ்




**அமெரிக்கா : ஜன. 5,**

**கடந்த 2002ல் அமெரிக்காவை சேர்ந்த கோடீசுவரரான எலான் மஸ்க், கலிபோர்னியா மாநிலத்தில் தொடங்கிய நிறுவனம் ஸ்பேஸ்எக்ஸ்.**

செயற்கை கோள் தயாரிப்பு, விண்வெளியில் செயற்கை கோள்களை நிலைநிறுத்துதல், விண்வெளி ஆராய்ச்சி, தொலை தொடர்பு உள்ளிட்ட பல துறைகளில் ஈடுபட்டு வரும் தனியார் நிறுவனமான ஸ்பேஸ்எக்ஸ், அதிவேக இணையவழி சேவைக்காக ஃபால்கன் எனும் ராக்கெட்டுகள் மூலம் ஸ்டார்லிங்க் செயற்கை கோள்களை செலுத்துவதில் முன்னணியில் உள்ளது.

இதுவரை, இந்நிறுவனம் 5000 சிறு செயற்கை கோள்களை விண்வெளியில் செலுத்தியுள்ளது. கடந்த 2022ல் ஸ்பேஸ்எக்ஸ் பணியாளர்கள் பலர், பணியிடத்தில் நிலவும் அசாதாரண சூழலை குறித்தும், எலான் மஸ்கின் பொதுவெளி நடவடிக்கைகள் குறித்தும் விமர்சித்து ஸ்பேஸ்எக்ஸ் உயர் அதிகாரி க்வைன் ஷாட்வெல் என்பவருக்கு கடிதம் எழுதியிருந்தனர்.

அதில் மஸ்கின் நடத்தை, நிறுவனத்தின் பரந்த நோக்கங்களுக்கு எதிராக "கவனத்தை திசை திருப்பும் இடையூறு" என குறிப்பிட்டிருந்தனர். இதை தொடர்ந்து புகார் அளித்த பணியாளர்களில் 8 பேரை ஸ்பேஸ்எக்ஸ் பணிநீக்கம் செய்துள்ளது. விமர்சனம் செய்ததால் தங்களை முறைகேடாக பணி நீக்கம் செய்ததாக அவர்கள் அமெரிக்காவின் தேசிய பணியாளர் நல வாரியத்திடம் புகாரளித்தனர்.

"எந்தவித விருப்பு வெறுப்புமின்றி நிறுவனத்தின் குறிக்கோளை நிலைநாட்டவும், சக பணியாளர்களின் நலன் குறித்தும், பணியிட சூழல் வசதியை மேம்படுத்த வலியுறுத்தியும் முறையிட, பணியாளர் நல சட்டப்படி ஊழியர்களுக்கு எல்லாவித உரிமைகளும் இருந்தபோதிலும் அதனை பயன்படுத்தியவர்களுக்கு எதிராக ஸ்பேஸ்எக்ஸ் நடவடிக்கை எடுத்திருப்பது சட்டவிரோதம்" என பணியாளர்களின் வழக்கறிஞர் டெபோரா லாரன்ஸ் தெரிவித்தார்.

இதனையடுத்து, நல வாரியத்தின் வழக்கறிஞருடன் ஸ்பேஸ்எக்ஸ் தரப்பு வழக்கறிஞர்கள் விவாதிப்பார்கள். இதில் சுமூக முடிவு எட்டப்படாவிட்டால் அடுத்தடுத்த நீதிமன்ற வழக்குகளை எலான் மஸ்க் சந்திக்க நேரிடும். பணிநீக்கம் சட்டவிரோதம் என உறுதியானால், ஸ்பேஸ்எக்ஸ் மீண்டும் அவர்களை பணியில் சேர்த்து கொள்ளவும், அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவும் நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் மசூதிக்கு வெளியே இமாம் சுட்டுக் கொலை : குற்றவாளியை தேடும் போலீஸ்




**நியூஆர்க் : ஜன. 5,**

**அமெரிக்காவின் நியூஜெர்ஸி மாகாணத்தில் மசூதிக்கு வெளியே முஸ்லிம் இமாம் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தப்பிச்சென்ற குற்றவாளியை தேடும் பணி நடந்து வருவதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.**

நியூ ஜெர்ஸி மாகாணத்தின் முக்கிய நகரமாக விளங்குவது நியூயார்க். இங்கு இஸ்லாமியர்கள் கணிசமான அளவில் வசிக்கின்றனர். இங்கு அமைந்துள்ள மஸ்ஜித் முஹம்மத் என்ற மசூதியில் ஹஸன் ஷரீஃப் என்பவர் கடந்த ஐந்து ஆண்டுகளாக இமாம் (இஸ்லாமிய மதகுரு) ஆக இருந்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை தொழுகையை முடித்துவிட்டு மசூதியை விட்டு வெளியே வந்த ஹஸன் ஷரீஃப், தனது காரில் ஏறி அமர்ந்துள்ளார். அப்போது அங்கு வந்த மர்ம நபர் ஒருவர், தனது கையில் இருந்த துப்பாக்கியால் காருக்குள் இருந்த ஹஸனை நோக்கி பலமுறை சுட்டுள்ளார்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டு அங்கு ஓடிவந்த பொதுமக்கள், ரத்த வெள்ளத்தில் கிடந்த ஹஸன் ஷரீஃபை மருத்துவமனை கொண்டு சென்றுள்ளனர். ஆனால் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தப்பித்துச் சென்ற குற்றவாளியை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும், இந்த சம்பவத்துக்கு காரணம் முன்விரோதமா அல்லது இஸ்லாமிய வெறுப்பா என்பது குறித்து விசாரித்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஈரானில் ராணுவ ஜெனரல் காசிம் சுலைமானி நினைவு தினத்தில் இரட்டை குண்டுகள் வெடித்து 103 பேர் உயிரிழப்பு



**கெர்மன் : ஜன. 5,**

**ஈரானில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இரட்டை குண்டுவெடிப்பில் 103-க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் 141 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.**

ஈரானின் ராணுவ ஜெனரல் காசிம் சுலைமானியை, 2020-ம் ஆண்டு அமெரிக்க ராணுவம் ட்ரோன் தாக்குதல் மூலம் படுகொலை செய்தது. இராக் தலைநகர் பாக்தாத் விமான நிலையத்துக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது தொடர்ந்து கண்காணித்து துல்லியமாக தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சுலைமானி உயிரிழந்தார். இந்த சம்பவம் சர்வதேச அளவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அவரது நான்காம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, ஆயிரக்கணக்கான மக்கள் அவரது நினைவிடத்தை நோக்கி ஊர்வலம் சென்றனர். அப்போது அந்தப் பகுதியில் இரண்டுமுறை குண்டுகள் வெடித்ததாகவும் இதில் 103-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் 140-க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தகவல் வெளியானது.

ஈரானின் தெற்கு நகரமான கெர்மனில் உள்ள சாஹேப் அல்-ஜமான் மசூதிக்கு அருகே நடந்த ஊர்வலத்தில் குண்டுகள் வெடித்துள்ளதாக அரசு செய்தி தொடர்பாளர் இரிப் தெரிவித்துள்ளார். 15 நிமிடத்துக்குள் இரண்டுமுறை வெடித்ததாக கூறப்படுகிறது. குண்டுவெடிப்பு நிகழ்ந்ததையடுத்து மக்கள் சிதறி ஓடியுள்ளனர். இதனால், கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

"இது ஒரு பயங்கரவாத தாக்குதல்" என்று கெர்மனின் துணை ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். அயதுல்லா அலி கமேனிக்குப் பிறகு ஈரானின் சக்திவாய்ந்த முக்கிய நபராக சுலைமானி இருந்தார். ஈரானின் புரட்சிகர படையின் தளபதியாக இருந்த அவர், ஈரானியக் கொள்கைகளை பிராந்தியம் முழுவதும் செயல்படுத்துவதில் முக்கிய பங்குவகித்தார். ஹமாஸ், ஹிஸ்புல்லா உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்கு தளவாட உதவிகள் வழங்குவதற்கும் அவர் பொறுப்பு வகித்தார்.

இந்நிலையில், அவரை அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் உலகின் முதன்மையான தீவிரவாதி என்று குறிப்பிட்டு அவரைக் கொல்ல உத்தரவிட்டார். 2020-ம் ஆண்டு ஜனவரி மாதம், இராக்குக்குச் சென்றிருந்த சுலைமானியை அமெரிக்கா ராணுவம் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்திக் கொன்றது. இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையெடுத்து அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான விரிசல் தீவிரம் அடைந்தது.

# 30 ஆண்டு சாதனையை முறியடித்த 13 வயது சிறுவன் உலகம் முழுவதும் குவியும் பாராட்டு




**லாஸ் ஏஞ்சல்ஸ் : ஜன. 5,**

**'டெட்ரிஸ்' என்ற வீடியோ கேம் விளையாட்டில் 30 ஆண்டுகளாக முறியடிக்க முடியாமல் இருந்த சாதனையை அமெரிக்காவைச் சேர்ந்த 13 வயது சிறுவன் ஒருவர் முறியடித்துள்ளார். அவருக்கு அவருக்குப் பாராட்டுகள் குவிந்து வருகிறது.**

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானைச் சேர்ந்த நிண்டெண்டோ நிறுவனம் 'டெட்ரிஸ்' என்ற பிளாக்குகளை வைத்து விளையாடும் வீடியோ கேமை அறிமுகம் செய்தது. அறிமுகம் செய்த காலத்தில் இருந்தே உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே இந்த விளையாட்டு பெரும் வரவேற்பை பெற்றிருந்தது.

குறிப்பாக, 90ஸ் கிட்ஸ் இடையே இந்த விளையாட்டை விளையாடாதவர்களே இருக்க முடியாது எனும் அளவிற்கு இது பிரபலமாக இருந்தது. இருப்பினும் இதை முழுவதுமாக முடிக்க முடியாதபடி இதனை உருவாக்கியவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

இந்த 30 ஆண்டுகளில் இதுவரை ஒருவர் கூட இந்த விளையாட்டை முழுமையாக முடித்ததில்லை. ஒரே ஒரு முறை செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினி ஒன்று இந்த விளையாட்டை முழுமையாக முடித்திருந்தது. ஆனால், மனிதர்கள் யாரும் இந்த விளையாட்டை முடிக்கவில்லை.

இந்நிலையில் வரலாற்று சாதனையாக அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த 13 வயது வில்லிஸ் கிப்ஸன் என்பவர் இந்த விளையாட்டை முழுமையாக முடித்துள்ளது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

'புளூ ஸ்கட்டி' என்ற பெயரில் ஆன்லைன் விளையாட்டுகளில் ஈடுபட்டு வரும் வில்லிஸ், கடந்த ஜனவரி 2-ம் தேதி யூடியூபில் வெளியிட்ட வீடியோவில், 'ஓ மை காட்' எனக்குறிப்பிட்டு, டெட்ரிஸ் விளையாட்டை முடித்துள்ளதை அறிவித்துள்ளார். இதன் மூலம் டெட்ரிஸ் விளையாட்டின் மொத்த சாதனைகளையும் அவர் முறியடித்துள்ளதாக 404 மீடியா நிறுவனம் அறிவித்துள்ளது. 'ரோலிங்' என்ற செயல்முறையைப் பயன்படுத்தி ஒரு நொடிக்கு 20 முறை பிளாக்குகளை இடம்மாற்றுவதோடு, அதன் வடிவங்களையும் மாற்றும் முறை கடந்த 2021-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. அதே முறையை; பயன்படுத்தி தற்போது வில்லிஸ் இந்த சாதனையைப் படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# செங்கடலில் கப்பல்கள் மீது தாக்குதல் ஹவுதிக்கு இறுதி எச்சரிக்கை விடுத்த அமெரிக்கா



**அமெரிக்கா : ஜன. 5,**

**ஹமாஸ்க்கு எதிராக போர் பிரகடனம் அறிவித்து காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திவருகிறது. ஹமாஸ்க்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சி குழு செங்கடலில் செல்லும் சர்வதேச கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.**

இதனால் அமெரிக்கா செங்கடலில் கண்காணிப்பை அதிகரித்துள்ளது. டிசம்பர் 19-ந்தேதியில் இருந்து 23 தாக்குதல்களை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தியுள்ளனர். கடந்த ஒருசில தினங்களுக்கு முன் கப்பல் மீது தாக்குதல் நடத்த வந்த ஹவுதியின் மூன்று படகுகளை அமெரிக்க கப்பற்படை தாக்கி அழித்தது. இதில் 10 ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுப்போம் என ஹவுதி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை நிறுத்த வேண்டும். இல்லையெனில் ராணுவ நடவடிக்கைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் அறிவித்துள்ளன. தாக்குதல் தொடர்ந்தால் எந்தவிதமான பதிலடியில் ஈடுபடும் என்பது குறித்து அமெரிக்காவின் உயர் அதிகாரி விரிவாக தெரிவிக்க மறுத்துவிட்டார். ஆனால் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளிடம் இருந்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மற்றொரு எச்சரிக்கையை எதிர்பார்க்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் ஆஸ்திரேலியா, பஹ்ரைன், பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, நியூசிலாந்து சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஒன்று இணைந்துள்ளன.

# நீதிமன்றத்தில் தீர்ப்பை வாசிக்கும் நீதிபதியை பாய்ந்து தாக்கிய குற்றவாளி



**நிவேடா : ஜன. 5,**

**லாஸ் வேகாஸ் நகரில், ஒரு தாக்குதல் வழக்கில் கைதானவர் டியோப்ரா ரெட்டன் (30).**

உடல்ரீதியான கடுமையாக தாக்குதல் நடத்தியதற்காகவும், அத்தாக்குதலால் பாதிக்கப்பட்டவருக்கு கடுமையான உடல் சீர்கேடு உருவானதாலும், இவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நிவேடா நகர நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. விசாரணை நிறைவுற்ற நிலையில், நீதிபதி மேரி கே ஹால்தஸ் எனும் 62 வயதான பெண் நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

ரெட்டன் தன் குற்றத்தை ஒப்பு கொண்டதால் அவருக்கு சிறை தண்டனை வழங்கும் தனது தீர்ப்பை நீதிபதி படித்து கொண்டிருந்தார். ரெட்டனின் வக்கீல் தனது கட்சிக்காரரை பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை எழுப்பிய போது, அதனை நீதிபதி மேரி மறுத்தார்.

இதில் கடுமையாக கோபம் கொண்ட ரெட்டன், நீதிபதி அமர்ந்திருக்கும் இருக்கைக்கு முன் உள்ள மேசையின் மீது அவரை அடிக்க பாய்ந்தார். அந்த மேசையில் இருந்த கொடி சின்னங்கள் கீழே விழுந்தன. இதையடுத்து அங்குள்ளவர்களில் 3 பேர் ரெட்டனை மடக்கி பிடித்தனர். காயங்கள் ஏதும் இல்லையென்றாலும் நீதிபதி மேரியின் உடல்நிலை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

நீதிமன்ற மார்ஷல்கள் எனப்படும் பாதுகாவலர்களில் ஒருவருக்கும் இந்த சம்பவத்தில் காயம் ஏற்பட்டு அவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் முழுவதும் நீதிமன்ற கண்காணிப்பு கேமிராவில் பதிவாகியிருந்தது. அக்காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. முன்னர் பதிவாகியிருந்த தாக்குதல் வழக்குகளுடன் இந்த வழக்கும் ரெட்டன் மீது பதிவாகியுள்ளது. கட்டுப்பாடுகளுக்கு பெயர் பெற்ற அமெரிக்காவில், நீதிமன்றத்திலேயே ஒரு பெண் நீதிபதி மீது நடைபெற்ற இத்தாக்குதல் சம்பவம் உலகையே அதிர வைத்துள்ளது.

# பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தல் : இம்ரான் கான் கட்சி கிரிக்கெட் பேட் சின்னத்தை பயன்படுத்த தடை


**இஸ்லாமாபாத் : ஜன. 5,**

**பாகிஸ்தானில் பாராளுமன்ற தேர்தல் அடுத்த மாதம் நடைபெற உள்ளது.**

இதற்கிடையே பல்வேறு வழக்குகள் தொடர்பாக சிறையில் உள்ள முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சாய் கட்சி தலைவரான இம்ரான் கான் இரண்டு தொகுதிகளில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருக்கிறார். அந்த 2 மனுக்களை தேர்தல் ஆணையம் ரத்து செய்தது.

இந்த நிலையில் இம்ரான் கான் கட்சிக்கு மேலும் ஒரு பின்னடைவு ஏற்பட்டு உள்ளது. கடந்த டிசம்பர் மாதம் 22-ந்தேதி அக்கட்சி சின்னமான கிரிக்கெட் பேட் சின்னத்தை தேர்தல் ஆணையம் முடக்கியது. தெக்ரிக்-இ-இன்சாப்பின் உட்கட்சி தேர்தலில் சட்ட விதிமுறைகளை மீறியதாக சின்னத்தை ரத்து செய்தது.

இதை எதிர்த்து பெஷாவர் ஐகோர்ட்டில் தெக்ரிக்-இ-இன்சாப் கட்சி வழக்கு தொடர்ந்து உள்ளது. இதில் தேர்தல் ஆணையத்தின் முடிவை 9-ந்தேதி வரை கோர்ட்டு நிறுத்தி வைத்தது. கோர்ட்டின் இந்த உத்தரவை மறுஆய்வு செய்ய தேர்தல் ஆணையம் மனு தாக்கல் செய்தது. அதில் தீர்ப்பளித்த கோர்ட்டு, கிரிக்கெட் பேட் சின்னத்தை முடக்கிய தேர்தல் ஆணையம் உத்தரவை உறுதி செய்தது. தேர்தல் ஆணையத்தின் முந்தைய உத்தரவு பிராந்திய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது.



பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சாக் கட்சிக்கு ஆதரவாக வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவு திரும்ப பெறப்படுகிறது. தேர்தல் ஆணையம் அதன் அரசியல் அமைப்பு தேர்தல் செயல்முறையை தொடங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது என்று கோர்ட்டு தீர்ப்பளித்தது. இதுகுறித்து பாகிஸ்தான் தெக்ரிக்-இ-இன்சாப் தலைவர் கோஹர்கான் கூறும்போது, தேர்தல் ஆணையத்தின் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்வோம். பிப்ரவரி 8-ம் தேதி நடைபெறவிருக்கும் தேர்தலை கட்சி புறக்கணிக்கும் எந்த வாய்ப்பும் இல்லை. எங்களுக்கு கிரிக்கெட் மட்டையை ஒதுக்க முடியாவிட்டால், எங்களுக்கு வேறு சின்னம் தருமாறு சுப்ரீம் கோர்ட்டில் நாங்கள் கேட்போம் என்றார்.

# கேலோ இந்தியா விளையாட்டு போட்டி பிரதமர் மோடியுடன் அமைச்சர் உதயநிதி சந்திப்பு





# அறந்தாங்கி அருகே மாட்டுவண்டி பந்தயம் போலீசார் உள்ளிட்ட 5 பேர் படுகாயம்

# சாதிப் பெயரைக் கூறி ஜல்லிக்கட்டு காளைகளை அவிழ்க்கக்கூடாது: உயர் நீதிமன்றம்




| சென்னை / புதுக்கோட்டை | 05.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

05.01.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பரமஹம்ச யோகானந்தர், இந்திய-அமெரிக்க குரு (பி.1893) (இ.1952)



ரா. கிருஷ்ணசாமி நாயுடு, தமிழக அரசியல்வாதி (பி.1902) (இ.1973)



முரளி மனோகர் ஜோஷி, இந்திய அரசியல்வாதி (பி.1934)



மம்தா பானர்ஜி, மேற்கு வங்காளத்தின் முதலமைச்சர் (பி.1955)



கனிமொழி, இந்திய அரசியல்வாதி (பி.1968)



## இன்றைய நினைவு நாள்

வெ. துரையனார், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்ட தென்னாப்பிரிக்கர் (பி.1891) (இ.1975)



அ. சீனிவாச ராகவன், தமிழக எழுத்தாளர் (பி.1905) (இ.1975)



ஆ. மாதவன், கேரளத் தமிழ் எழுத்தாளர் (பி.1934) (இ.2021)

